ISSN 1391-9504

# Vijey விஜய் விஜய்

13.05.2009 - மலர் 06, இதழ் 10

Rs.25.00

## ‘ஃபெக்ஸ்’ கருவியின் அறிமுகமும் தொழிற்பாடும்



## நீர் நிறைந்த ஏரியின் கதை




## உலகை அச்சுறுத்தும் ‘வைரஸ்’ காய்ச்சல்

## குப்த பேரரசின் வளர்ச்சியும் வீழ்ச்சியும்



விலை ரூபா 15/-

தமிழ்பேசும் பிள்ளைகளுக்கான அறிவுசார் வாரப்பத்திரிகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வயோதிபம் ஒரு தடையல்ல



மனவலிமை இருக்குமானால் அதற்கு வயோதிபம் தடையாக இருக்காது என்பதற்கு உதாரணமாகத் திகழ்கிறார் இந்த 83 வயது மூதாட்டி. பேட் சால்மன் என்னும் இந்த மூதாட்டி மெல்பர்னில் ஒரு யோகா பயிற்சியாளராக செயல்படுகிறார். 8 வருடங்களுக்கு முன்னரே ஓய்வுபெற நினைத்த இவர், இவரின் புதல்வி சுசியின் (அவரும் ஒரு யோகா பயிற்சியாளர்) வற்புறுத்தல் காரணமாக ஆசிரியர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்யும் வகையில் யோகா பயிற்சிகளை வழங்கி வருகிறார். வயது முதிர்ந்த நிலையில் இவர் யோகா பயிற்சி அளித்து வருவதோடு தொடர்ந்து பயிற்சி பெற்றும் வருகிறார்.

வாராந்தம் பதினொரு வகுப்புகளை இவர் நடத்தி வருகிறார். கடந்த 40 வருடகாலமாக யோகா பயிற்சி பெற்று வரும் இவருக்கு அதனைக் கைவிடும் உத்தேசம் இல்லையாம்.

# உலகை அச்சுறுத்தி வரும் புதிய வைரஸ் காய்ச்சல்

**சுவைன் ப்ளூ, (Swine flu) பிக் இன்ப்ளூவென்ஸா (Pig influenza) ஹொக் ப்ளூ (Hog flu) பன்றிக் காய்ச்சல் என்றெல்லாம் கூறப்படும் புதிய வைரஸ் காய்ச்சலானது பன்றிகளைத் தாக்கும் சுவைன் இன்ப்ளூவென்ஸா வைரஸ் (Swine influenza virus) என்னும் கிருமியின் மூலமே பரவுவதாக நம்பப்படுகிறது. இதனை சுருக்கமாக எஸ்.ஐ.வி (SIV) என்கின்றனர். விஞ்ஞானிகள் இதற்கு H1N1 கிருமி எனப் பெயரிட்டுள்ளனர். பன்றி இறைச்சியை சமைக்கும்போது அதில் உள்ள இக்கிருமிகள் அழிந்துவிடுவதால் பன்றி இறைச்சியிலிருந்து மனிதனுக்கு இக்கிருமி தொற்றும் சாத்தியம் இல்லையென்றே தெரிவிக்கப்படுகின்றது.**

பன்றிகளோடு தொடர்புடையவர்கள் மற்றும் பன்றி வளர்ப்புப் பண்ணைகளில் வேலை செய்பவர்களுக்கே பன்றிக் காய்ச்சல் இலகுவாகத் தொற்றிக் கொள்ளும் வாய்ப்பு இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. இந்த நோய் தொற்றலுக்கான அறிகுறிகளாக குளிர், காய்ச்சல், தொண்டைவலி, தசைகளில் வலி, தலைவலி, இருமல், பலவீனம் மற்றும் அசதி என்பன காணப்படுகின்றன.



இந்தக் காய்ச்சலை ஏற்படுத்தும் வைரஸ் உருமாறும் தன்மை கொண்டது. பன்றிகளில் இருந்து இந்த வைரஸ் மனிதனுக்குள் புகுந்தே இக்காய்ச்சலை ஏற்படுத்துகிறது. மெக்ஸிக்கோவின் பன்றிகள் வளர்க்கப்படும் பண்ணைகளில் இருந்தே இவை மனிதனுக்குத் தொற்றி இருக்கவேண்டும் என்று கருதப்படுகிறது. பன்றிகளுக்கு இக்கிருமி எப்படி பரவியது என்பதற்குச் சரியான காரணங்கள் தெரியவில்லை.

அமெரிக்காவிலிருந்து வரும் பறவைகள் மூலம் மெக்ஸிக்கோவில் உள்ள பன்றிகளுக்கு இந்த வைரஸ் தொற்றி இருக்கவேண்டும் என்றும் பன்றிகளில் புகுந்த இந்த வைரஸ் உருமாறி மனிதனுக்குப் பரவியிருக்க வேண்டும் என்றும் நம்பப்படுகிறது. மனிதனுக்குள் நுழையும் இந்த வைரஸ் பல்கிப் பெருகி சுவாசம் மூலம் மற்றவர்களுக்கு எளிதில் பரவும் தன்மை கொண்டது. அதனால், இந்த நோய் தாக்கமுள்ள பகுதிகளில் நடமாடுகையில் வாயையும் மூக்கையும் மூடும் கவசங்களை அணிதல், கை, கால்களை அடிக்கடி சவர்க்காரம் இட்டுக் கழுவுதல் மற்றும் இருக்கும் இடத்தை தூய்மையாக வைத்திருத்தல் என்பன மிக அவசியமான விடயங்களாகும்.



உலகெங்கும் சுகாதார அதிகாரிகள் இந்த நோய் பரவாமல் இருக்கும் வகையில் மிகுந்த கவனத்துடன் பல நடவடிக்கைகளை எடுத்த போதிலும் நோய் பரவும் நிலையானது உலகை அச்சுறுத்துவதாகவே உள்ளது. உலக சுகாதார நிறுவன தகவல்களின்படி உலகின் 18 நாடுகளில் இதுவரை 898 இற்கும் மேற்பட்டவர்கள் இந்நோயால் பாதிக்கப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. இந்த எண்ணிக்கை மேலும் அதிகரிக்கலாமென்றும் அஞ்சப்படுகின்றது.



இதேவேளை, இச்செய்தி அச்சுக்குப் போகும்வரை உலகெங்கும் 21 நாடுகளில் இந்நோய் பரவியிருப்பதாகவும் 26 மரணங்கள் உட்பட ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்களை இந்நோய் தாக்கியிருப்பதாகவும் தெரியவந்துள்ளது.

மெக்ஸிக்கோ ஜனாதிபதி பெலிக் கால்டெரன் வழங்கிய தொலைக்காட்சிப் பேட்டியொன்றில் உலகெங்கிலும் சுவைன் ப்ளூ வைரஸுக்கு எதிராக நடத்தப்பட்ட யுத்தத்தில் தமது நாடு பிரதான பங்கு வகித்ததன் மூலம் ஆயிரக்கணக்கானவர்களின் உயிர்கள் காப்பாற்றப்பட்டிருப்பதாகத் தெரிவித்தார். இத்தொற்று நோய் தற்பொழுது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டிருப்பதாகவும் இதன் காரணமாக மூடப்பட்டுள்ள வர்த்தக நிலையங்கள், பாடசாலைகள், அருங்காட்சியகங்கள் போன்ற அனைத்தும் மீண்டும் திறக்கப்பட்டு மீண்டும் வழமை நிலைக்குத் திரும்பும் என்றும் அவர் கூறினார்.

இதேவேளை, இந்த வைரஸ் குறித்து இன்னும் அவதானமாக இருக்கவேண்டும் என்றும் மக்கள் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளாக சவர்க்காரம் இட்டு உடலைக் கழுவிக்கொள்ளல் போன்றவற்றில் ஈடுபட்டு தம்மை தூய்மைப் படுத்திக் கொள்ளவேண்டும்'' என்றும் அவர் வேண்டுகோள் விடுத்தார்.

நிலைமை இவ்வாறு இருக்கையில் எமது அண்டை நாடான இந்தியவையும் இந்த வைரஸ் தாக்கி இருக்குமோ என்ற சந்தேகம் தற்போது ஏற்பட்டுள்ளது. கனடாவில் இருந்து வந்த ஒரு வெளி நாட்டவர் உட்பட மூன்று பேரை இந்த வைரஸ் தாக்கி இருக்கலாமென சந்தேகிக்கப்படுகிறது. இதைத் தொடர்ந்து இந்தியாவின் அனைத்து விமான நிலையங்கள் மற்றும் துறைமுகங்களில் மருத்துவக் குழுவினர்கள் நியமிக்கப்பட்டு வெளிநாடுகளில் இருந்து வருபவர்கள் தீவிரமாகப் பரிசோதிக்கப்படுகின்றனர்.

இந்த நோயை 'பன்றிக் காய்ச்சல்' என்று அறிமுகப் படுத்தியதிலிருந்து பன்றி இறைச்சி விற்பனை பெரிதும் பாதிக்கப்பட்டிருப்பதாகவும் பன்றியிலிருந்து இந்நோய் தொற்றியதற்கான எந்த ஆதாரமும் கிடைக்கவில்லையென்றும் பன்றி இறைச்சியை வேக வைக்கும்போது அதில் இக்கிருமிகள் இருந்தால் அவை அழிந்துபோய் விடுவதாகவும் பன்றி இறைச்சியால் எவ்வித பாதிப்பும் ஏற்படுவதில்லை என்றும் இதனால், இந்நோயை 'பன்றிக்காய்ச்சல்' என்று கூறுவது பொருத்தமானதல்ல என்று கூறும் வர்த்தகர்கள் இந்நோய்க்கு 'இன்ப்ளுவென்ஸா ஏ' என்று பெயரிடுமாறு கோரிக்கை விடுத்துள்ளனர். இதனையடுத்து இந்நோய் இனி 'இன்ப்ளுவென்ஸா ஏ' என்று அழைக்கப்படுமென்று தெரிகிறது.

இவ்வாறு உலகை அச்சுறுத்திக்கொண்டு இருக்கும் இந்த நோய் எமது நாட்டுக்கும் பரவி விடாமல் இருக்கும் வகையில் மேற்கூறப்பட்ட முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளைக் கைக்கொள்வதுடன் சுற்றுச்சூழலையும் தூய்மையாக வைத்துக்கொள்வதன் மூலம் இந்நோயை மட்டுமன்றி எந்த நோயும் எம்மை அணுகாமல் பார்த்துக் கொள்ளமுடியும்.

-ராஜா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## (உயர்/தர)த்திற்கும்

# புள்ளி வழங்கல் முறையிலேயே மாணவர்கள் அனுமதிக்கப்படுவர்!


விஜய

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்
08, ஹுனுப்பிட்டிய குறுக்கு வீதி,
கொழும்பு - 02
தொலைபேசி: 2479653,
மின்னஞ்சல்: Vijey @ Wijeya.lk


க.பொ.த (சா/தர) பரீட்சையில் சித்தியெய்திய மாணவர்களை உயர் தரத்தில் கற்பதற்காக வேண்டி,வேறு பாடசாலைகளில் அனுமதித்துக்கொள்ளும் நடவடிக்கையை புள்ளி வழங்கல் முறையின் அடிப்படையில் மேற்கொள்வதற்கு கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது.

அதன்படி, விண்ணப்பதாரியின் வதிவிட பிரதேசத்தின் அடிப்படையிலேயே புள்ளிகள் வழங்கப்படவுள்ளன. இதற்கமைய, கல்விக் கோட்டத்திற்குள் வசிப்பதாயின் 10 புள்ளிகள், வலயத்துக்குள் வசிப்பதாயின் 7 புள்ளிகள்,மாவட்டத்துக்குள் வசிப்பதாயின் 5 புள்ளிகள், மாகாணத்துக்குள் வசிப்பதாயின் 3 புள்ளிகள், மாகாணத்துக்கு வெளியே வசிப்பதாயின் 1 புள்ளி என்ற அடிப்படையில் புள்ளிகள் வழங்கப்படும்.


மேலும், க.பொ.த (சா/தர) பரீட்சை பெறுபேறுகளுக்காக அதிகபட்சம் 50 புள்ளிகள் வழங்கப்படும் எனவும் கல்வி அமைச்சு வெளியிட்டுள்ள சுற்று நிருபத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.



அதன்படி, விசேட சித்தியொன்றுக்கு 6 புள்ளிகளும் அதிதிறமை சித்தியொன்றுக்கு 5 புள்ளிகளும் திறமைச் சித்தியொன்றுக்கு 4 புள்ளிகளும் சாதாரண சித்தியொன்றுக்கு 2 புள்ளிகளும் வழங்கப்படும் எனவும் மேலதிக பாடங்களுக்காக ஒரு பாடத்துக்கு 1 புள்ளி வீதம் இரு பாடங்களுக்கு புள்ளிகள் வழங்கப்படும்.

இவைதவிர, தேசிய மற்றும் மாகாண மட்டத்திலான பாடத்துடன் தொடர்புடைய மூன்று செயற்பாடுகளுக்காகவும் புள்ளிகள் வழங்கப்படவுள்ளன. அதில் தேசிய மட்டத்தில் முதலிடம் பெற்றிருப்பின் 5 புள்ளிகளும் இரண்டாமிடம் பெற்றிருப்பின் 4 புள்ளிகளும் மூன்றாமிடத்தைப் பெற்றிருப்பின் 3 புள்ளிகளும் வழங்கப்படும். மாகாண மட்டத்தில் முதலிடத்துக்கு 3 புள்ளிகளும் இரண்டாம் இடத்துக்கு 2 புள்ளிகளும் மூன்றாம் இடத்துக்கு 1 புள்ளியும் வழங்கப்படும்.

தேசிய பாடசாலைகள் மற்றும் பிரதான பாடசாலைகளில் உயர் தரத்திற்கு அனுமதியைப் பெற்றுக்கொள்வதற்காக அதிக எண்ணிக்கையிலான விண்ணப்பப்படிவங்கள் கிடைக்கின்றமையினால், அனுமதி வழங்குவதற்கு மாணவர்களைத் தெரிவு செய்வதில் சீரான விதிமுறையைக் கைக்கொள்வதற்காகவே மேற்படி புள்ளி வழங்கல் செயல்முறையை பின்பற்றத் தீர்மானித்ததாக கல்வி அமைச்சின் சிரேஷ்ட அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.



# நீரின்றி நலம் ஏது?



நமது உடல் தோலினை மென்மையாகவும் மிருதுவாகவும் வைத்துக் கொள்வதற்கு உடலில் உள்ள நீரே உதவுகிறது. பிறந்த குழந்தைகளின் உடல் மிகவும் மென்மையாக இருப்பதை நீங்கள் அவதானித்திருப்பீர்கள். அதற்குக் காரணமும் நீர்தான். பிறந்த குழந்தையின் உடலில் சுமார் 75-80 சதவீதம் அளவிற்கு நீர் இருக்கிறது. அதுவே வருடங்கள் கழிந்து, முதுமையை எட்டும்போது, உடலில் உள்ள நீரின் அளவு 50 சதவீதமாகக் குறைந்து விடுகின்றது. அதனால்தான் முதுமையில் தோலில் சுருக்கங்கள் ஏற்படுகின்றன.

இவைதவிர, அண்மையில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வொன்று வித்தியாசமான தகவலொன்றை வெளிப்படுத்தியுள்ளது. அதாவது, நீர்நிலைகளை அண்டிய பகுதிகளில் வசிப்பவர்களில் பலருக்கு நீச்சல் தெரிந்திருக்க வாய்ப்பு உண்டு. எனினும், நீச்சல் அடிப்பதால் என்ன பயன் கிடைக்கிறது என்பதை அறிய தெற்கு கெரோலினா பல்கலைக்கழக ஆராய்ச்சியாளர்கள் ஓர் ஆய்வை மேற்கொண்டார்கள். அந்த ஆய்வின் முடிவில் அடிக்கடி நீர்நிலைகளில் நீச்சலடிப்பவர்கள், ஏனையவர்களை விட நீண்ட நாட்கள் ஆரோக்கியமாக உயிர் வாழ்வார்கள் எனத் தெரியவந்துள்ளது.

அடிக்கடி நீச்சல் அடிப்பவர்களும் நீச்சல் மேற்கொள்ளாதவர்களும் இந்த ஆராய்ச்சிக்கு உட்படுத்தப்பட்டனர். ஆராய்ச்சிக்கு உட்படுத்துவதற்கு முன்னர் அவர்களின் உடல் ஆரோக்கியம் உட்பட அவர்களது பழக்க வழக்கங்கள் குறித்த தகவல்களும் சேகரிக்கப்பட்டன. அதனை அடுத்து மேற்கொள்ளப்பட்ட ஆராய்ச்சியின் முடிவில் அடிக்கடி நீச்சல் அடிப்பவர்கள் மற்றவர்களைக் காட்டிலும் அதிக நாட்கள் உயிர் வாழ்வது உறுதி செய்யப்பட்டது.



## தரம்-1 அனுமதி

# பெற்றோரின் வீட்டில் வசிக்கும் விண்ணப்பதாரி பிரதான குடியிருப்பாளராகக் கருதப்படுவார்

அடுத்த வருடம் (2010) தரம்-1 இற்கு மாணவர்களை அனுமதித்துக் கொள்வதற்கான தேர்வின்போது, தமது பெற்றோரின் வீடுகளில் வசித்து வருகின்ற விண்ணப்பதாரர்கள், குறித்த வீட்டின் பிரதான குடியி ருப்பாளர்களாகக் கருதப்படுவார்கள் என்று கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

தேர்தல் இடாப்பின் படி விண்ணப்பதாரரின் தந்தையார் பிரதான குடியிருப்பாளராகக் கருதப்படுவார். இருந்த போதிலும் பாடசாலைக்கு பிள்ளையை அனுமதித்துக் கொள்வதற்கான தேர்வின் போது விண்ணப்பதாரியை குறித்த வீட்டின் பிரதான குடியிருப்பாளராகக் கருதி, புள்ளிகள் வழங்கப்படவுள்ளதாகவும் கல்வி அமைச்சின் செயலாளர் தெரிவித்துள்ளார்.



அத்துடன், அடுத்த வருடத்தில் தரம்-1 இற்கு மாணவர்களை அனுமதிப்பதற்கான விண்ணப்பங்கள் அடுத்த மாதம் தொடக்கம் ஏற்றுக்கொள்ளப்படும் என்றும் குறிப்பிடப்படுகின்றது.


உங்களுக்கு என்ன தேவை?
தபால் மூல ஆங்கில பாடநெறியா? இதோ
ENGLISH COURSE BY POST
இலகுவாக ஆங்கிலம் கற்றுக் கொள்ள விரும்பும் அனைவருக்கும் சிறந்த ஒரு வழிகாட்டி ENGLISH LANGUAGE யில் தபால் மூல ஆங்கில பாடநெறிகள்.
BASIC/SPOKEN ENGLISH அடிப்படையில் இருந்தே தமிழ் விளககத்துடன் கற்றுக் கொடுக்கப்படும் தமிழ எழுத வாசிக்க தெரிந்து இருந்தால் போதுமானது.
DIPLOMA IN ENGLISH தமிழில் ஓர் அளவு விளக்கம் கொடுக்கப்பட்டிருக்கும். ஆங்கிலம் தெரிந்த மாணவர்களுக்கு இது ஒரு சிறந்த பாடநெறியாகும்.
60 நாட்களுக்குள் அங்கீகரிக்கப்பட்ட Diploma சான்றிதழ் வழங்கப்பட்டும்
FREE FREE T.SHIRT
இலவசம் இலவசம் பாடநெறியில் இணையும் அனைவருக்கும் அழகிய T.SHIRT ஒன்று வழங்கப்படும்
இலங்கையின் எப்பாகத்தில் இருந்தும் எம்முடன் இணைய முடியும்
பாடநெறியில் இணைய வயது கட்டுபாடோ, ஆங்கில முன் அறிவோ தேவையில்லை. பாடசாலை மாணவர்கள், தொழில் புரிவோர், தொழில் வாய்ப்பை எதிர்பார்த்திருப்போர், இல்லத்தரசிகள் என யாவருக்கும் இணைய முடியும்.
மேலதிக விபரங்களுக்கு 20/- பெறுமதியான 2 முத்திரைகள் அனுப்பி பெறலாம்.
THE ENGLISH LANGUAGE INSTITUTE
P.O. BOX 83, KANDY. Tel: 081-561 5 561, 0777-220002


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அவசர உலகின் ஃபெக்ஸ் (Fax) கருவி

**உலகின் ஓரிடத்தில் இருந்து மற்றோரிடத்திற்கு சாவகாசமாகச் செய்திகளை எழுத்து மூலம் பரிமாறிக் கொள்ளக் கடிதங்களைப் பயன்படுத்துகிறோம். நொடிப்பொழுதில் வாய்மூலமாகச் செய்திகளைப் பரிமாறிக் கொள்ளத் தொலைபேசியை நாடுகிறோம். தாளில் உள்ள செய்திகளை, படங்களை உள்ளது உள்ளபடியே நொடிப்பொழுதில் அனுப்ப இப்பொழுது நாம் ஃபெக்ஸைப் பயன்படுத்துகிறோம். ஃபெக்ஸ் இப்பொழுது பரவலாகப் பயன்பாட்டிற்கு வந்தவுடன் தொலைவுகள் சுருங்கி விட்டன.**



## ஃபெக்ஸ் என்பது என்ன?

ஆவணங்கள் (Documents) வரைபடம், புகைப்படம் இவற்றை மின் அல்லது வானொலி குறிப்பலைகளின் மூலம் அனுப்பி அதை மீண்டும் வேறொரு தாளிலோ, புகைப்படச் சுருளிலோ பெறப் பயன்படும் கருவிதான் ஃபெக்ஸிமிலி (Facsimile). இதனையே சுருக்கமாக ஃபெக்ஸ் (Fax) என அழைக்கின்றனர்.

## ஃபெக்ஸின் வரலாறு

இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் அதாவது, 1902 இல் ஆர்த்தர் கோன் (Arthur Korn) என்ற ஜேர்மனி நாட்டு விஞ்ஞானியே தற்பொழுது பயன்படுத்தப்படுகின்ற ஃபெக்ஸ் மொடலை ஒத்த ஃபெக்ஸைக் கண்டுபிடித்தார். 1920 ஆம் ஆண்டு முதல் நாளேடுகளுக்குச் செய்திகளை அனுப்ப ஃபெக்ஸ் பயன்படத் தொடங்கியது. 1962 முதல் இக்கருவி மிகவும் பிரபலமடைந்துவிட்டது.

பொதுவாக ஒரு ஃபெக்ஸ் (Fax) கருவியில் ஒளி மூலம் (Source) மின்னூட்ட இணைப்பிட்ட கருவிகள் (Charged Coupled Device-CCD) மொடெம் (Modem) தொலைபேசித் தொடர் (Telephone Line) ஆகியவை காணப்படும். முதலில் நாம் அனுப்ப வேண்டிய பத்திரமோ, படமோ அல்லது புகைப்படமோ உள்ள தாளை ஒரு ஸ்கேனரில் (Scanner) வைத்து ஏதேனும் ஒரு ஒளி மூலத்திற்கு உட்படுத்த வேண்டும்.

தாளிலிருந்து பிரதிபலிக்கப்படும் ஒளி ஒரு 'லென்சின்' வழியே ஆடிகளின் (Mirrors) மூலம் மின்னூட்ட இணைப்பிட்ட கருவிகளை அடையும். இவற்றில் பல்லாயிரக்கணக்கான மிகச் சிறிய செல்கள் (Cells) காணப்படும். இவை பிரதிபலிக்கப்பட்ட ஒளியை மின்சாரமாக மாற்றும். தாளிலுள்ள வெண்மையான பகுதியிலிருந்து பிரதிபலிக்கப்படும் ஒளியும் கருமையான மற்றும் நிறப்பகுதிகளிலிருந்து பிரதிபலிக்கப்படும் ஒளியும் வேறுபடும். இந்த ஒளி வேறுபாட்டிற்கு ஏற்பவே செல்களில் உண்டாக்கப்படும் மின்சாரத்தின் மின்னழுத்தமும் வேறுபடும்.

பின் இந்த மாறும் மின்னழுத்தம் உடைய ஒளி இலக்கவியல் குறிப்பலைகளாக (digital Signals) மாற்றப்படும். இலக்கவியல் குறிப்பலைகள் மொடெம் (Modem) என்ற மின்கருவிக்கு அனுப்பப்படும். 'மொடெம்' என்பது அலையேற்றியான மொடுலேட்டர் (Modulator) ஐயும் ஒருங்கே உள்ளடக்கிய கருவியாகும். 'மொடெம்' இலக்கவியல் குறிப்பலைகளைச் சுமப்பு அலையுடன் (Carrier Waves) கலக்கும். பின் இந்த மொடெம் அலைகளை ஒரு தொலைபேசித் தொடரின் மூலம் தொலைவில் உள்ள ஃபெக்ஸ் கருவிக்கு அனுப்பும். அங்கு இவை பிரிக்கப்படும்.

அதன் பின் முன்பு விளக்கப்பட்ட தாளிலுள்ள தகவல் ஒளியாகப் பிரதிபலிக்கப்படுதல், இந்த ஒளி இலக்கவியல் குறிப்பலைகளாக மாற்றப்படுதல் மற்றும் 'மொடெம்' மூலம் சுமப்பு அலையுடன் கலத்தல் இவை எல்லாம் தலைகீழாக நடைபெற்றுத் தொலைவிலுள்ள ஃபெக்ஸ் கருவியின் உருளையில் (Drum) கொடுக்கப்பட்டிருக்கும் தாளில் பதிவாகும்.

## படங்களின் அல்லது செய்திகளின் தெளிவு

ஒளி மூலத்திலிருந்து வரும் ஒளிக்கோடுகளின் (Scanning Lines) இடைவெளிகளைப் பொறுத்தே செய்திகளோ, படங்களோ தெளிவாக அமையும்.




மேற்கூறிய செயல்கள் ஒவ்வொன்றாக நடைபெற நேரம் அதிகமாகும் என எண்ணவேண்டாம். அத்துடன், தொலைபேசிக்கு ஆகும் செலவுதான் ஃபெக்ஸ் மூலம் செய்தி அனுப்பவும் வசூலிக்கப்படுகின்றது.

மொடெம் தொலைபேசித் தொடரின் மூலம் தகவலை அனுப்பும் முன் தொலைபேசித் தொடரின் தரத்தைப் (Quality) பரிசோதிக்கும். தரமற்ற தொலைபேசித் தொடர் மூலம் அனுப்பப்படும் தகவல்கள் தெளிவாக இருக்காது (Scrambled) அது மட்டுமன்றிச் செய்திகள், படங்கள் இவை தெளிவற்றுப் போய் விட்டால், முன்பு அனுப்ப எண்ணி ஃபெக்ஸ் உருளையில் வைக்கப்பட்ட அதே செய்திகள் அல்லது படங்கள் இவற்றை மீண்டும் தெரிவிக்குமாறு ஃபெக்ஸ் கருவியை பயன்படுத்துபவரிடமே எழுத்து மூலம் காட்சித் திரையில் (display) கேட்கும் ஆற்றல் பெற்றது மொடெம்.

தொலைபேசித் தொடர் தரமற்றதாக இருப்பின் மொடெம் தகவல்களை நுண்ணலை (Micro wave) வழியாக அனுப்பும்.

ஃபெக்ஸ் பல இன்னோரன்ன விடயங்கள் தொடர்பான தகவல்களை அனுப்பப் பயன்படுகின்றது. செய்தித்தாள், வியாபாரம் தொடர்பான தகவல்களை மட்டுமன்றி காவல்துறையில் கைரேகைகள், புகைப்படங்கள் உள்ளிட்ட எத்தனையோ விடயங்களை அனுப்பவும் பயன்படுகிறது.





## முதன்முதலாக வந்த ஃபெக்ஸ்

முதன்முதலாகப் பயன்பாட்டிற்கு வந்த ஃபெக்ஸ் 1/4 அளவுத் தாளிலுள்ள செய்திகளையோ, படங்களையோ 6 நிமிடங்களில் அனுப்பின. அதன்பின் வந்தவைகளோ 30 விநாடிகளில் அனுப்பின. அதாவது, 12 மடங்கு துரிதமாகச் செயல்படுகின்றன. ஆனால், இப்பொழுது வந்துள்ள ஃபெக்ஸ் கருவிகளோ 1/4 அளவுத் தாளில் உள்ளவற்றை 4 விநாடிகளில் அனுப்பக்கூடியன. அந்தளவிற்கு தொழில்நுட்பம் வளர்ச்சி அடைந்துவிட்டது.

இன்று எந்தத் துறையையும் விட செய்தித்தாள்களுக்கு இதன் பங்களிப்பு மிகவும் அவசியமானது. அதிகாலையிலும் மாலையிலும் செய்திகளை முந்தித் தரும் செய்தித்தாள்களுக்குச் செய்திகளையோ, படங்களையோ முந்தித் தர நிருபர்கள் நாடுவது இன்றும் ஃபெக்ஸ் தான் என்பது ஒரு குறிப்பிடத் தக்க விடயமாகும். மின்னல் வேகத்தில் இயங்கும் உலகிற்கு ஃபெக்ஸின் பங்கு மிக அவசியமாகும்.

## கின்னஸில் இடம்பெற்ற ஃபெக்ஸ்

சமீபத்தில் சாதனை புரிந்த ஃபெக்ஸ் 'கின்னஸ்' புத்தகத்தில் இடம்பெற்றுள்ளது. இந்தியாவிலேயே இந்த ஃபெக்ஸ் தயாரிக்கப்பட்டது.உலகிலேயே 36 1/2 அங்குல அகலத்தாள்களிலுள்ள செய்திகளை அல்லது படங்களை அனுப்பக்கூடியது இந்த ஃபெக்ஸ் என்பது குறிப்பிடத்தக்கது.

**-இரஞ்சித் ஜெயகர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'செவ்வாய்' செந்நிறமாகத் தோன்றுவதேன்?



இரவில் வானை நோக்கினால் வெற்றுக்கண்களுக்குத் தெரியக்கூடிய ஐந்து கிரகங்களான; புதன், வெள்ளி, செவ்வாய், வியாழன், சனி ஆகியனவற்றில் செவ்வாய் கிரகத்தை யார் வேண்டுமானாலும் எளிதில் அடையாளம் கண்டுகொள்ள முடியும். காரணம், ஏனைய கிரகங்களுடன் ஒப்பிடும்போது, செவ்வாய் மாத்திரமே செந்நிறத்தில் நன்கு தோற்றமளிக்கின்றது.



செவ்வாய்க்கிரகம் ஏன் சிவந்த நிறத்தில் காணப்படுகின்றது? என்பதற்குப் பல விளக்கங்கள் உள்ளன. செவ்வாயில் நீர் இருந்ததாகக் கூறப்படும் காலகட்டத்தில், அக்கிரகத்தின் பாறைகளில் அடங்கிய இரும்புத் தாதுக்கள் மீது நீர் படிந்ததால், அவை நாளடைவில் ரசாயன மாற்றங்களுக்கு உள்ளாகி, செந்நிறத்தைப் பெற்றன என கருதப்படுகிறது.

பொதுவாகத் தண்ணீர் படக்கூடிய இடத்தில் இரும்புத்துண்டு ஒன்றைப் போட்டு வைத்தால், அது துருப்பிடிக்கும். இரும்பு துருப்பிடிக்க காற்றில் உள்ள ஈரப்பதனும் காரணமாக அமைகின்றது. இப்படித் துருப்பிடிக்கும் இருப்புத்துண்டு, இறுதியில் சிதைந்து-சிவந்த நிறம் கொண்ட பொடியாகிவிடும். ஆக, செவ்வாயிலும் இப்படித்தான்; பாறைகளில் உள்ள இரும்புத்தாதுக்கள் துருப்பிடித்து, செந்நிறமாக மாறியிருப்பதாக செவ்வாய் தொடர்பில் நீண்டகாலமாக ஆய்வுகளை மேற்கொண்டு வரும் ஆராய்ச்சியாளர்கள் கருதுகின்றனர்.

எனினும், அண்மைக்காலத்திலிருந்து செவ்வாய்க் கிரகத்தின் சிவப்பு நிறத்திற்கு புதிய விளக்கம் ஒன்று தரப்படுகின்றது. அதாவது, அமெரிக்கா 1997 ஆம் ஆண்டில் பாத்ஃபைண்டர் (Pathfinder) என்ற ஆளில்லாத விண்கலத்தை செவ்வாய்க்கு அனுப்பியது. அந்த விண்கலம் செவ்வாயின் பாறைகளில் உள்ளதை விட, செவ்வாயின் தரையில் அதிக அளவில் இரும்பும் அதாவது, இரும்புத்துருவும் மெங்கனீசும் இருப்பதாகத் தகவல் அனுப்பியது. செவ்வாயின் மேல் மட்ட மண்ணில்தான் இவை காணப்படுகின்றன. இவை விண்வெளியில் இருந்து வந்தவை என 'பாத்ஃபைண்டர்' அனுப்பிய தகவல்களை வைத்து அமெரிக்க விஞ்ஞானி ஒருவர் கருத்துத் தெரிவித்துள்ளார்.

அத்துடன், விண்வெளியில் இருந்து நுண்ணிய தூசு-துணுக்குகள், விண்கற்கள் போன்றவை தொடர்ச்சியாக பூமியில் விழுந்து கொண்டே இருக்கின்றன. இவை வளிமண்டலத்தில் நுழையும்போது, தீப்பற்றி-பொடியாகி-உதிர்ந்து கீழே விழுந்து விடுகின்றன. செவ்வாயிலும் இப்படித்தான் நிகழ்கிறது என அந்த விஞ்ஞானி மேலும் கூறுகின்றார். இரும்பு அதிகம் அடங்கிய விண்கற்களும் விண்வெளித்தூசுகளும் இவ்வாறு வந்து செவ்வாயில் விழுவதன் விளைவாகவே, செவ்வாய் இவ்விதம் சிவப்பு நிறத்தைப் பெற்றது என்பது அவரது கருத்தாகும்.



# மேகவித்தை

**கடந்த ஆண்டு சீனாவில் நடைபெற்ற ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டிகளின்போது மழையினால் பாதிப்பு ஏற்பட்டு விடக்கூடாது என்பதற்காக அந்தப் போட்டிகள் நடக்கும் இடங்களுக்கு மேலாக சென்ற மழை மேகங்களை விசேட ரசாயனக் குண்டுகள் கொண்ட பீரங்கியால் சுட்டுக் கலைத்தார்கள். அவ்வாறே, சமீபத்தில் சீனாவின் தலைநகரான பீஜிங்கில் கடும் வறட்சி ஏற்பட்டபோது, மேகங்களைச் சுட்டு, மழை பொழிய வைக்க முயன்று தோல்வி கண்டார்கள்.**

**எனவே, இவ்வாறு இயற்கையை நம் வசதிக்கேற்ப கையாளும்போது இயற்கை நம்முடன் முரண்பட்டு விடுகிறது. அத்துடன், மேகங்களின் திசை, அது நிலை கொண்டிருக்கும் உயரம் என்பனவற்றை அளக்க ஒரு விசேட கருவி இருக்கிறது, அதனை 'நீபோஸ்கோப்' (Nephoscope) என அழைக்கின்றனர்.**

# விழும் கற்கள்






**தம் சுழற்சியிலிருந்து விலகி, பூமிக்கருகே வந்து, அதன் ஈர்ப்பில் பூமியை நோக்கி வீழ்வனவற்றைத் தான் விண்கற்கள் (Meteorite) என்கின்றோம். இந்த விண்கற்கள் நிமிடத்துக்கு சராசரியாக 6,000 என்ற எண்ணிக்கையில் பூமியில் விழுகின்றன. அவற்றில் பல பூமியின் வளிமண்டலத்தில் ஊடுருவும்போது அழிவடைந்தும் விடுகின்றன.**

## எதையும் தாங்கும் உடை

விண்வெளியின் கதிரியக்கம் பூமியைத் தாக்காமல் இருப்பதற்காக, பூமியை ஒரு போர்வை இயற்கையாகவே போர்த்தியிருக்கிறது. அதுதான் வளிமண்டலம். அப்படியானால் விண்வெளிக்குப் போகும் வீரர்கள் விண்கலத்தை விட்டு வெளியே உலா வருகிறார்களே, அவர்களை இந்தக்



கதிரியக்கம் தாக்காதா? தாக்கும். எனினும், அவர்களை அப்போது காப்பது அவர்கள் அணிந்திருக்கும் விண்வெளி உடைதான். அதுமட்டுமல்ல, இந்த விண்வெளி உடையானது விண்வெளி வீரர்கள் சுவாசிக்கத் தேவையான பிராண வாயுவையும் தன்னகம் கொண்டது; அவ்வாறே, ரத்தம் கொதிக்காதவாறு கட்டுப்படுத்தவும் இந்த உடை உதவுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அநுராதபு

**இலங்கை அந்நியர் ஆதிக்கத்திற்குட்படும் வரையில் அவ்வப்போது பல்வேறு மன்னர்கள் ஆட்சி செய்துள்ள வரலாற்றை நாம் காணலாம். 1815 ஆம் ஆண்டு கண்டி இராச்சியம் பிரித்தானியர் ஆட்சியின் கீழ்வந்ததுடன் இந்நாட்டில் மன்னர் ஆட்சி முற்றுப் பெற்றது எனலாம். இந்நாட்டை ஆட்சி செய்த மன்னர்கள் வரிசையில் அநுராதபுரத்தை ஆட்சி செய்த சில மன்னர்கள் வருமாறு:-**

## மகாசேனன் (கி.பி 272-299)



அநுராதபுரத்தை கி.பி 272-299 ஆம் ஆண்டு காலப்பகுதி வரையில் ஆட்சி செய்த மகாசேனன் என்ற மன்னர் கோதாபய மன்னரின் புத்திரராவார்.

இம்மன்னர் அவரது ஆட்சிக்காலத்தில் இந்நாட்டில் 'மஹாயான' பௌத்தத்தைப் பரப்புவதில் பெரும் முயற்சியை மேற்கொண்டார். அநுராதபுரத்தில் கம்பீரமாக காட்சி தருகின்ற 'ஜேதவனாராம' தூபி இவரின் ஆட்சியின் கீழ் நிர்மாணிக்கப்பட்டதாகும். அத்துடன், விவசாய அபிவிருத்திக்காக பல குளங்களையும் இவர் நிர்மாணித்தார். மின்னேரிய, கவுடுலு, ஹுருலு, மாகல்ல, மஹகனகெதர ஆகிய குளங்கள் இம்மன்னரின் ஆட்சியின் கீழ் நிர்மாணிக்கப்பட்ட குளங்களாகும்.

## முதலாவது சேன (கி.பி 813-839)



முதலாவது சேன மன்னரின் ஆட்சியின் போது இலங்கை மீது மிக மோசமான இந்தியப் படையெடுப்புகள் இடம்பெற்றன. அவரின் 20 வருட கால ஆட்சியில் 10 வருடங்களுக்கு மேலாக அந்நியப்படைகளை அடக்கி தமது ஆட்சியைப் பாதுகாக்கவே செலவிட்டார்.

* 'ஹிடிகல' தாதுகோபத்தை நிர்மாணித்தமை.
* ஜேதவனாராம மற்றும் அபயகிரி விகாரைகளை புணர்நிர்மாணம் செய்தமை என்பன இவரின் கால சேவைகளாகும்.

## புத்ததாச மன்னர் (கி.பி 336-365)



புத்ததாச மன்னரின் தந்தை இரண்டாவது ஜெட்டதிஸ்ஸ மன்னர் ஆவார். புத்ததாச மன்னரின் ஆட்சிக்கால சாதனைகளில் அவர் ஒரு சிறந்த வைத்தியராக இருந்ததாக வரலாற்றில் பதிவாகியிருக்கின்றது.

* மனிதர்களுக்கும் ஏனைய உயிரினங்களுக்கும் மருத்துவச்சாலைகளை நிர்மாணித்தமை.
* 'சாரார்த்த சங்கிரஹ' என்ற மருத்துவத் தகவல்கள் அடங்கிய நூல் ஒன்றை (ஏட்டுக் குறிப்பு அல்லது ஓலைச்சுவடுகளாக) எழுதியமை என்பன இம்மன்னர்கால முக்கிய சாதனைகளாக நினைவுகூரப்படுகின்றன.

## தாதுசேனன் (கி.பி 459-477)



தாதுசேன மன்னர் மௌரிய வம்சத்தைச் சேர்ந்தவராவர். இவர் சிறிது காலம் பிக்குவாகத் துறவறம் பூண்டிருந்து விட்டு மீண்டும் துறவறம் கலைந்து அரியாசனம் ஏறினார். சீகிரியாவை நிர்மாணித்த காசியப்ப மன்னர் இவரின் புதல்வராவார்.

இவர் தமிழர் படையெடுப்பொன்றை முறியடித்தே அரியாசனம் ஏறினார். கலாவெவ உட்பட 18 பெரிய குளங்களையும் மேலும் 18 சிறிய குளங்களையும் நிர்மாணித்து நீர்ப்பாசன வசதியை விஸ்தரித்தார். 'அவுக்கனை' புத்தர் சிலை தாதுசேன மன்னர் காலத்தைச் சேர்ந்ததாக கருதப்படுகின்றது.

## இளவரசர் தாதுசேனன் (கி.பி 513-522)



முதலாவது முகலன் மன்னரின் புத்திரரே இளவரசர் தாதுசேனராவார். இவர் குமாரதாச என்ற பெயர் மூலமே பிரசித்தி பெற்றுள்ளார். இவர் இந்தியாவின் மகாகவி காளிதாசரின் நெருங்கிய நண்பர் எனக் கருதப்படுகின்றது. 'ஜானகீஹரணய' என்ற காவியத் தொகுப்பு இவராலேயே இயற்றப்பட்டதாக வரலாற்றில் பதிவாகியிருக்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரக் கால மன்னர்கள்



## ஐந்தாவது மஹிந்த மன்னர் (கி.பி 974-1010)

அநுராதபுரக் காலத்தின் கடைசி மன்னரான இவர் ஐந்தாவது சேன என்ற மன்னரின் சகோதரராவார். இவரது ஆட்சி மிகவும் பலவீனமான நிலையில் இருந்ததாகக் கருதப்படுகின்றது. தமது ஆட்சியில் படைவீரர்கள் ஊதியம் கேட்டு அரச மாளிகையை சுற்றி வளைத்த போது இவர் உருஹுனைப் பிரதேசத்திற்குத் தப்பியோடியதாகவும் கூறப்படுகின்றது.

இக்காலப்பகுதியில்தான் ராஜராஜ சோழன் என்ற சோழ வம்ச மன்னர் அநுராதபுரத்தை ஆக்கிரமித்தார். கி.பி 1017 ஆம் ஆண்டளவில் ராஜராஜ மன்னரின் புத்திரனும் அவரது படைகளும் ஐந்தாவது மஹிந்த (மிஹிந்து) மன்னரைக் கைது செய்து இந்தியாவிற்கு நாடு கடத்தியதாக அல்லது கொண்டு சென்றதாக குறிப்புக்கள் கூறுகின்றன. அவர் 1029 இல் இந்தியாவில் காலமானார்.

## முதலாவது அக்ரபோ மன்னர் (கி.பி 578-612)

இவர் மகாநாக மன்னனின் மருமகனாவார். இவரின் ஆட்சி அமைதியான ஆட்சியாகக் கருதப்படுகின்றது. இவரது காலத்தில் சத்தாமல, அசக்தாமல, தமி, பெபிரி, தளபிசோ, அநுருத், தளஹேரத், தளசல,கித்சிரி,புரமரு,சூரியபாஹு உட்பட 12 புகழ் பெற்ற அரசவை கவிஞர்கள் வாழ்ந்ததாகக் குறிப்புக்கள் கூறுகின்றன.



* மின்னேரியாக் குளத்திற்கு இணைந்ததாக கால்வாய் ஒன்றை நிர்மாணித்தமை.
* 'மணிமேகலை' என்ற அணையை நிர்மாணித்தமை


ஆகியன அக்ரபோ மன்னர்கால சாதனைகளாக குறிப்பிடப் படுகின்றன.

## இரண்டாவது சேன (கி.பி 839-874)

இரண்டாவது சேன மன்னரின் ஆட்சிக்காலம் அநுராதபுரக்கால வரலாற்றில் முக்கியத்துவம் வாய்ந்த காலப்பகுதியாக அமைகின்றது. இம்மன்னர் 35 வருடங்களாக ஆட்சி செய்தார். இக்காலம் அமைதியான சூழல் நிலவிய காலப்பகுதியாகும். இக்காலப்பகுதியில்தான் தென் இந்திய பாண்டிய அரசாட்சி மீது படையெடுப்பு நிகழ்ந்தது. அத்தருணத்தில் பாண்டிய மன்னரின் வேண்டுகோளுக்கிணங்க இலங்கையில் இருந்து குட்டா என்ற தளபதியின் கீழ் படையொன்றை தென் இந்தியாவுக்கு அனுப்பினார். அப்படைகள் அங்கு ஶ்ரீ வல்லப என்ற மன்னரைத் தோற்கடித்து இரண்டாவது வரகுன என்ற இளவரசனுக்கு அரசாட்சியைக் கைப்பற்ற உதவி புரிந்ததாகக் குறிப்புக்கள் கூறுகின்றன.




லம்பகர்ண மற்றும் மௌரிய குலத்திற்கிடையில் நீண்டகாலம் நிலவி வந்த முரண்பாடுகள் மற்றும் மோதல்கள் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டு ஒரு வகையான அமைதிச் சூழல் நிலவியது மானவர்ம மன்னரின் காலத்திலாகும்.



## மானவர்மன் (கி.பி 689-698)

மேற்படி, லம்பகர்ண மற்றும் மௌரிய முரண்பாடுகள் நிலவிய காலத்தில் மானவர்மன் இந்தியா சென்று அங்கு நரசிம்மன் என்ற பல்லவ அரசரின் படையில் சிறிது காலம் பணி புரிந்துள்ளார். அங்கிருந்து படைபலத்துடன் நாடு திரும்பிய அவர் ஹந்ததாட என்ற மன்னரைத் தோற்கடித்து ஆட்சியைக் கைப்பற்றினார்.



## ஐந்தாவது காசியப்பன் (கி.பி 902-912)

ஐந்தாவது, காசியப்பன் தவன சேன மன்னரின் புதல்வராவார். இம்மன்னரின் ஆட்சிக்காலத்திலும் மாரவர்மன் ராஜசிங்கன் என்ற முதலாவது, பராந்தக என்ற சோழ மன்னனுக்கு எதிராகப் போரிட இலங்கையில் இருந்து படையொன்றை தென் இந்தியாவுக்கு அனுப்புமாறு கேட்டுக் கொள்ளப்பட்டது.

அதற்கமைய படைகள் அனுப்பப்பட்டன. வேலூர் என்ற இடத்தில் சிங்கள, பாண்டிய நாட்டுப்படைகள் மோதிக் கொண்டன. அப்படைகள் சோழர்களைத் தோற்கடித்தன. அத்துடன், பௌத்த தர்மத்தை ஏட்டுச் சுவடிகளில் அல்லது ஓலைச்சுவடிகளில் பதிவு செய்தமை ஐந்தாவது காசியப்ப மன்னர் காலத்தில் நிகழ்ந்ததாகும்.

இவ்வாறான, அநுராதபுரக்கால மன்னர்கள் உள்ளூரில் ஆட்சியை கொண்டு நடத்துவதில் அக்கறையுடன் செயற்பட்டது மட்டுமல்லாமல் தென் இந்திய மன்னர்களுடனான தொடர்பையும் பேணி வந்துள்ளதாக வரலாற்றுச் சான்றுகள் பகர்கின்றன.





அமீர் ஹுசைன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குப்த பேரரசின் வளர்ச்சியும் வீழ்ச்சியும்

## தரம்-10 மாணவர்களின் வரலாறு பாடத்திட்டத்திற்கு உட்பட்டது



அஜந்தா குகை ஓவியம்

இந்திய வரலாற்றில் குப்தர்களின் ஆட்சிக்காலம் 'பொற்காலம்' எனப் போற்றப்படுகின்றது. இக்காலகட்டங்களில் நாட்டின் சகல துறைகளிலும் முன்னேற்றம் நிலவியது. எனினும் இவ்வாறு மிளிர்ந்த குப்த பேரரசு, ஸ்கந்தகுப்தரின் ஆட்சிக் காலத்தில் வீழ்ச்சிப்படியை நோக்கி நகர்ந்தது.

### ஆட்சி முறை

குப்த மன்னர்கள் எல்லையற்ற அதிகாரங்களைக் கொண்டவர்களாகக் காணப்பட்டனர். இது நாட்டின் அரசியல் ஒற்றுமைக்கு வழி வகுத்தது. பேரரசானது பல மாநிலங்களாகப் பிரிக்கப்பட்டு, அம்மாநிலங்கள் ஆளுனர்களினால் நிர்வகிக்கப்பட்டு வந்துள்ளன. அரச அதிகாரிகள் ராஜ தர்மத்தைப் பின்பற்றினார்கள். கிராமங்கள் உள்ளூர்த் தலைவர்களால் நிர்வகிக்கப்பட்டு வந்துள்ளன.

குப்தர்கள் பல நிலையான படைப் பிரிவுகளை வைத்திருந்தனர். இதில் யானைப்படை, குதிரைப்படை, வில்லாளர்கள் படை என்பன மிக முக்கிய இடத்தை வகிக்கின்றன. நிலவரி, வணிகவரி போன்றனவும் வசூலிக்கப்பட்டுள்ளன. நீதி வழங்கும் முறையும் மேம்பட்டுக் காணப்பட்டுள்ளது. அத்தோடு, பல சட்டப் புத்தகங்களும் எழுதப்பட்டுள்ளன.

### பொருளாதார நிலை

குறிப்பிட்ட சில காலங்களுக்கு நாடு செழிப்பாகக் காணப்பட்டாலும், அநேகமான மக்கள் வறுமையில் வாடியமைக்கான சான்றுகளே அதிகமாக உள்ளன. எனினும், விவசாயமும் ஏனைய சில தொழில் நடவடிக்கைகளும் படிப்படியாக, குறிப்பிடத்தக்க முன்னேற்றம் கண்டன. வணிகம் பெருகிக் காணப்பட்டுள்ளது. சீனா, இந்தோனேஷியா, இலங்கை போன்ற நாடுகளுடன் வியாபாரத் தொடர்புகள் பெருமளவில் பேணி வரப்பட்டுள்ளன.

### சமூக அமைப்பு

மக்கள் செல்வச் சிறப்பும் தாராள குணமும் கொண்டவர்களாக இருந்தனர். நாட்டின் சில பகுதிகளில் உயர்குடியில் பிறந்த சில பெண்கள், அரச நிர்வாகத்தில் பங்கு பெற்றனர். மகளிர் சுயம்வரம் மூலம் தனக்கேற்ற கணவரைத் தேர்ந்தெடுக்கும் முறை இருந்து வந்தது. அதேவேளை, சமஉரிமை இன்றி, ஆண்களைவிட பெண்கள் தாழ்ந்தவர்களாகக் கருதப்பட்டமை, அடிமைத்தனத்துக்கு உட்படல் போன்ற சில சிக்கல்களுக்கும் பெண்கள் முகம் கொடுத்தனர்.


### சமய நிலை

குப்த மன்னர்கள் இந்து சமயத்தையே ஆதரித்தனர். நாட்டின் முக்கிய சமயமாக இந்து சமயமே இருந்து வந்துள்ளது. சமஸ்கிருதம் அரச மொழியாகக் காணப்பட்டது. விஷ்ணுவும் சிவனும் முக்கிய கடவுள்களாக வணங்கப்பட்டனர். சூரியக் கடவுளுக்கும் தனிக் கோயில்கள் கட்டப்பட்டுள்ளன. பிற உயிர்களிடம் அன்பு செலுத்துவதும் கடவுள் பக்தியும் முக்கியமானதாகக் காணப்பட்டுள்ளன. பண்டைய இதிகாசங்களும் புராணங்களும் புத்துயிர் பெற்றுக் காணப்பட்டுள்ளன. புத்த சமயமும் ஓரளவு வளர்ச்சி கண்டுள்ளது.

### கல்வி வளர்ச்சி

குப்தர்கள் கல்விக்கு முக்கியத்துவம் அளித்துள்ளனர். கல்வி கற்றவர்களும் அறிஞர்களும் மன்னர்களால் பெருமைப்படுத்தப்பட்டனர். நாலந்தா, தக்ஷிலா, உஜ்ஜைனி, சாரணாத், விக்ரமசீலா ஆகிய கல்வி நிலையங்கள் புகழ்பெற்று விளங்கின. அந்நிய நாடுகளில் இருந்தும் மாணவர்கள் இங்கு வந்து கல்வி கற்றுள்ளனர்.

இக்காலகட்டத்தில் 'நவரத்தினங்கள்' என்ற புனைப் பெயரால் அழைக்கப்பட்ட, புகழ்பெற்ற ஒன்பது அறிஞர்கள் இரண்டாம் சந்திரகுப்தரின் அவையை அலங்கரித்தனர். அவர்களில் காளிதாசர் முதன்மையானவர். இவருடைய மிகச் சிறந்த படைப்புகளான மேகதூதம், குமார சம்பவம், ரகு வம்சம் ஆகியவை அவற்றின் இலக்கிய நயத்துக்காகவே உலகப் புகழ்பெற்றன. இவற்றுடன் சாகுந்தலம், விக்ரம ஊர்வசியம் போன்ற அவருடைய நாடகங்களும் புகழ்பெற்றவையே. காளிதாசரின் இலக்கிய சேவைக்காக அவர் இந்தியாவின் 'ஷேக்ஸ்பியர்' என்றழைக்கப்படுகின்றார். அகராதியைத் தொகுத்த அமரசிம்மர், பஞ்ச தந்திரக் கதைகளை எழுதிய விஷ்ணு சர்மா உள்ளிட்டவர்கள் நவரத்தினங்கள் என அழைக்கப்பட்டவர்களில் புகழ்பெற்றவர்களாவர். பதினெட்டுப் புராணங்களும் இவர்களுடைய காலத்திலேயே எழுதப்பட்டுள்ளன.




### அறிவியல்

வராகபட்டர் (ஆர்யபட்டா) என்ற மிகச் சிறந்த கணித மேதை குப்தர் காலத்தில் வாழ்ந்தவராவார். இவர் பூமி வட்ட வடிவமுடையது என்றும் அது சூரியனைச் சுற்றி வருகின்றது என்றும் நிரூபித்துள்ளார். அத்தோடு, சூரிய-சந்திர கிரகணங்கள் தோன்றுவதற்கான காரணங்களையும் கண்டறிந்தார். இவர் எழுதிய 'ஆரியபட்டீயம்' என்ற நூலில், தசமதானத்தின் அடிப்படை, எண்களின் இடமதிப்பு, பூச்சியத்தின் உபயோகம், வர்க்கமூலம் போன்றவற்றை விவரித்துள்ளார். அத்துடன், 'சோதிட சாஸ்திரம்' என்ற நூலை வானவியலில் வல்லவராகத் திகழ்ந்த வராகமித்திரர் என்ற அறிஞர் எழுதியுள்ளார். இவருடைய மற்றொரு நூலான 'பிருகத சம்கிதம்' என்ற நூல் பல புவியியல் கருத்துக்களை உள்ளடக்கியதாகும். மற்றொரு அறிஞரான பிரம்ம குப்தர் என்பவர் 'பிரும்ம சித்தாந்தம்' என்ற நூலில் புவியின் ஈர்ப்புவிசை பற்றிய கருத்துக்களைக் கூறியுள்ளார்.

நாகர்ஜூனர் என்பவர் அக்காலத்தில் வாழ்ந்த மருத்துவ அறிஞர் ஆவார். இவருடன் தன்வந்தரி என்ற அறிஞர் ஆயுர்வேத மருத்துவத்தில் புகழ்பெற்று விளங்கினார். கரகர், சுஷ்ருதர் போன்ற மருத்துவ அறிஞர்களும் குப்தர் காலப்பகுதியில் வாழ்ந்தவர்கள் ஆவார்கள்.

### கலைகள்


குப்தர்கள் கட்டடக்கலை, சிற்பக்கலை, ஓவியக்கலை ஆகியவற்றைப் போற்றி வளர்த்துள்ளனர். சாரணாத்திலும் மதுராவிலும் புத்தர் சிலைகள் புகழ்பெற்றவை. உலகப் புகழ்பெற்ற அஜந்தா, எல்லோரா குகைகளில் உள்ள ஓவியங்கள் குப்தர் காலத்துக்குரியனவாகும். தியோகர் என்னுமிடத்தில் விஷ்ணுவிற்கு அமைக்கப்பட்ட கற்கோயிலும் காசிப்பூரில் உள்ள 'பித்தாரி' கோயிலும் புகழ்பெற்றவை. இலங்கையில் உள்ள 'சீகிரியா' சுவர் ஓவியங்கள் குப்தர் காலச் செல்வாக்குக்கு உட்பட்டதாகும். அத்தோடு, இலங்கையில் மகாமேக வனத்தில் காணப்படுகின்ற சமாதி புத்தர் சிலையும் குப்தரின் மரபைத் தழுவியே நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

### வீழ்ச்சி

குப்தர் பரம்பரை ஸ்கந்த குப்தரின் ஆட்சியுடன் வீழ்ச்சியடைய ஆரம்பித்தது. குப்தர்களின் வீழ்ச்சிக்கான காரணிகளாக;ஹூணர் (யூணர்)களின் படை யெடுப்பு, ஸ்கந்தகுப்த மன்னரின் மரணம், வாரிசுரிமை தொடர்பான பகைமைகள், பேரரசின் பிரமாண்டமான பரவல், பல சிற்றரசுகளின் தோற்றம், உள்நாட்டில் ஏற்பட்ட கலவரங்கள் போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

**எஸ்.எம்.எம். ஹரீஸ்**





நாலந்தா கல்வி நிலையம்

அஜந்தா குகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சுவையும் மருத்துவ குணமும் கொண்ட மாம்பழம்

**சித்திரை, வைகாசி மாதங்களில் பொதுவாக மாம்பழம் பெருமளவில் கிடைக்கின்றது. தற்பொழுது மாம்பழ சீசன் ஆரம்பித்துள்ளதால் நாடு முழுவதும் பல்வேறு வகையான மாம்பழங்கள் சந்தைக்கு வந்துள்ளன. இக்காலகட்டத்தில் பொதுவாகவே அதிகளவில் மாம்பழங்களை நாம் வாங்குவதும் உண்பதும் இயல்பானதே. எனவே, மாம்பழம் குறித்த பல்வேறு சுவையான தகவல்களையும் அதன் மருத்துவ குணங்களையும் நன்மை, தீமைகளையும் ஆராய்வோம்.**

## மாம்பழத்தின் மகிமை

முக்கனிகளில் முதல் கனியான மாம்பழத்தின் பெருமையோ மிக அபாரம். மாம்பழம் குறித்து புராணங்களில் குறிப்பிடப்பட்டிருப்பதோடு, தற்காலக் கவிதைகளிலும் பாடல்களிலும் கூட அதிகம் இடம்பெற்றிருப்பதற்கு உரிய காரணம் அதன் தித்திக்கும் தேன் சுவையே. இந்தியாவின் சேலத்து மாம்பழத்திற்கும் ஈழத்தின் யாழ்ப்பாண மாம்பழத்திற்கும் ஒரு தனி மவுசு உண்டு. இனிய சுவையுடைய இந்த மாம்பழத்தின் தாயகம் இந்தியா என்றே கருதப்படுகின்றது.

## மாம்பழ வகைகள்

பொதுவாக சித்திரை வைகாசி மாதங்களில் மாம்பழம் அதிகமாக விளைந்தாலும் பங்குனி முதல் ஆடி வரையான காலப் பகுதிகளே மாம்பழம் அதிகமாக விளையும் பருவ (சீசன்) காலமாக இருக்கின்றது. ருமானி, பெங்களூரா, பச்சை, பங்கனபல்லி, நீலம்,பீத்தர், மல்கோவா, வெள்ளைக்கொழும்பான் கறுத்தைக்கொழும்பான் உள்ளிட்ட பல்வேறு வகையான மாம்பழங்கள் சந்தைக்கு வருகின்றன.



சிலவகை மாம்பழங்கள் அதிக இனிப்பாக இருக்கும். சிலவகை இனிப்பும் புளிப்பும் கலந்து ஒருவகை ருசியோடு இருக்கும். சிலவகை மாம்பழங்களோ வெறும் புளிப்பாக இருக்கும். சில பழங்கள் சதைப்பற்றாக உண்பதற்கு மா போல் இருக்கும். சில நாராகவும் இருக்கும். மாம்பழத்தை முழு உணவாகக் கொள்ளலாம். இது எல்லா வகையான சத்துக்களையும் தன்னுள்ளே கொண்ட சுவையான பழமாகும்.

இப்பழத்தில் 'விற்றமின் ஏ' உயிர்ச்சத்து அதிக அளவில் இருக்கின்றது. வேறு எந்தப் பழவகைகளிலும் இச்சத்து இந்தளவு அதிகமாகக் கிடையாது. சிலர் மாம்பழம் உடலுக்கு அதிக உஷ்ணத்தை ஏற்படுத்துகின்றது என்பர். ஆனால், சமையலின் போது பயன்படுத்தப்படும் புளி போன்ற சுவையூட்டிகளை விட குறைந்தளவு உஷ்ணமே மாம்பழத்தில் இருக்கின்றது என்பதுதான் உண்மை.

மேலும் அப்பிள், கொய்யா, எலுமிச்சை, வாழைப்பழம் இவைகளில் இருக்கும் உஷ்ணத்தை விட ஒப்பீட்டளவில் மாம்பழத்தின் உஷ்ண அளவு குறைவுதான். எனவே, சிறுவர் முதல் பெரியோர் வரை இப்பழத்தை தினம் உண்டு சுவைக்கலாம்.



## மாம்பழம் சாப்பிடும் முறை

மாம்பழத்தை பலர் உணவோடு உண்கிறார்கள். அதாவது, உணவில் காய்கறிக்குப் பதிலாக பயன்படுத்துகிறார்கள். இது முற்றிலும் தவறு. மாம்பழத்தை காலையில் அல்லது மாலையில் தனியாகத்தான் உண்ண வேண்டும். உணவோடு உண்டால் அதன் சத்துக்கள் நமக்குக் கிடைக்காமல் போய்விடும் என்பதை மறந்துவிடக்கூடாது. சுருக்கமாகக் கூறின் இப்பழத்தை உண்ண நினைப்பவர்கள் சாப்பாட்டிற்குப் பின் உண்பது நல்லது. இதனை வெறும் வயிற்றில் உண்பதை தவிர்க்க வேண்டும். மாம்பழங்கள் பல்வேறு வகைப்பட்டாலும் எல்லாவற்றிற்கும் மருத்துவ குணங்கள் உண்டு.

## மருத்துவ குணங்கள்

✱ **வயிற்றுப் புண் குணமாக:** காலை உணவு முடிந்ததும் 30 நிமிடங்களுக்குப் பின் 50 கிராம் மாம்பழச் சாறுடன் ஒரு தேக்கரண்டி நெய்யும் ஒரு தேக்கரண்டி தேனும் கலந்து பருகி வந்தால் சில நாட்களில் வயிற்றுப்புண் குணமாகும். பழச்சாறைப் பருகும் பொழுது அதிகமாக மலம் கழிந்தால் தேனை சற்று அதிகமாக்கினால் கழிவு நின்றுவிடும்.

✱ **இருதயம் பலமடைய:** சதைப் பற்றுள்ள இரண்டு மாம்பழங்களை எடுத்து சாறு பிழிந்து தேன்,குங்குமப் பூ, ஏலக்காய் தூள், பச்சைக் கற்பூரம் இவைகளை சிறிதளவு எடுத்து, இப்பழச் சாற்றில் கலந்து, பாலையும் சேர்த்து உண்டால் இருதயம் பலப்படும். தொடர்ந்து 15 நாட்களாவது இரவில் உணவுக்குப் பின் பருகி வர இருதயம் நன்கு பலப்படும்.

✱ **சிறுநீர்ப்பையில் உள்ள கற்களைக் கரைக்க:** மாம்பழத்தை உண்டு விட்டு, அதன் கொட்டையிலுள்ள பருப்பை எடுத்துச் சுட்டு சிறிது உண்பது நல்லது. இம்மாதிரி அவ்வப்போது உண்டு வந்தால் சிறுநீர்ப்பையில் உள்ள கற்களையே கரைத்து விடலாம்.

✱ **தோல் சுருக்கம் நீங்க:**
இரவு உணவுக்குப் பின் மாம்பழத்தை உண்டு விட்டு, ஒரு டம்ளர் பாலையும் பருகி வந்தால் முகம் அழகு பெறும் தோல் சுருக்கம் நீங்கிப் பளபளப்பாகும்.

✱ **வாந்திபேதி குணமாக:** மாம்பழத்தைப் பிழிந்து சாறெடுத்து அதை வெந்நீரில் கலந்து, சிறிது சீனியையும் சேர்த்துப் பருகினால் வாந்திபேதி நோய் குணமாகும்.

✱ **பசி அதிகரிக்க:** பலருக்குப் பசியே எடுப்பதில்லை. ஏதோ நேரத்திற்கு மிகுந்த சிரமத்துடன் சிறிது உணவு உண்பார்கள். இப்படிப்பட்டவர்கள் மாம்பிஞ்சுகளை நிழலில் காய வைத்து,பின் நறுக்கி, உப்பு நீரில் போட்டு வெயிலில் காயவைத்தல் வேண்டும்.இதை அவ்வப்போது உணவோடு சேர்த்து உண்டு வந்தால்,பசி அமோகமாக ஏற்படும்.

✱ மாமரத்தின் இளந்தளிர் இலைகள், பூக்கள், மாம்பிஞ்சுகள், மாங்காய், மாம்பழம், மாம்பழத் தோல், மாமரப்பட்டை யாவுமே மருத்துவப் பயனுடையதாக இருக்கின்றன.

✱ மாங்காய் ஊறுகாய், மாம்பழ ஜேம், மாம்பழ ஜூஸ் (சாறு) என்பன சுவைமிகுந்த உணவுகளாகும்.

✱ மாம்பழத்தோலை அரைத்து தேன் கலந்து உண்டு வர சீதபேதி குணமாகும்.

✱ மாம்பழத்தில் 'கரோட்டின்' சத்து மற்றப் பழங்களைவிட அதிகமாக இருக்கிறது. 'கரோட்டின்' சத்து நமக்குத் தேவையான அளவு இல்லையெனில், சளித்தொற்று ஏற்படும். அத்துடன், ஈரல், குடல் போன்ற இடங்களில் ஏற்படும் பல்வேறு நோய்களை இப்பழம் தீர்க்கும்.

## மாம்பழத்தினால் ஏற்படும் நன்மைகள்

✱ கண்நோய்கள் பலவற்றை நீக்கும்.
✱ வயிறு தொடர்பான சில பிரச்சினைகளைப் போக்கும்.
✱ இரத்தம் விருத்தியாகும்.
✱ சமிபாட்டை எளிமையாக்கும்.
✱ பல் ஈறுகளைக் காக்கும்.
✱ மூளைக்கு சக்தியைக் கொடுக்கும்.
✱ நரம்புத் தளர்ச்சியை நீக்கும்.
✱ மாலைக்கண் கோளாறைப் போக்கும்.
✱ உமிழ்நீரைச் சுரக்க வைக்கும்.
✱ வயிற்றிலுள்ள கிருமிகளை அழிக்கும்.
✱ ஈரல் சம்பந்தமான நோய்களைப் போக்கும்.
✱ கொழுப்புச் சத்து இல்லாதவர்களுக்கு 'கொழுப்புச்' சத்தைத் தரும்.
✱ வியர்வையைப் பெருக்கும்.
✱ உடல் வலிமையைத் தரும்.

நீரிழிவு உள்ளவர்களும் சொறி, சிரங்கு அதிகம் கொண்டவர்களும் மாம்பழத்தை உண்பதை தவிர்த்துக்கொள்ள வேண்டும்.


### மாம்பழத்திலுள்ள சத்துக்களின் மதிப்பீடு

| | |
|---|---|
| நீர் (ஈரப்பதன்) | - 76.0 கிராம் |
| நார் | - 0.6 கிராம் |
| தாதுப்பொருள் | - 0.4 கிராம் |
| புரதம் | - 0.5 கிராம் |
| மாப்பொருள் | - 17.0 கிராம் |
| சுண்ணாம்புச் சத்து | - 13.0 மில்லி கிராம் |
| பொஸ்பரஸ் | - 15.0 மில்லி கிராம் |
| கரோட்டின் | - 2740.0 ug |
| எரிசக்தி | - 72.0 கலோரி |
| தையமின் | - 0.7 மில்லி கிராம் |
| நியாசின் | - 0.8 மில்லி கிராம் |
| ரைபோஃபிளேவின் | - 0.08 மில்லி கிராம் |
| விற்றமின் C | - 16.0 மில்லி கிராம் |

### ஓர் அவுன்ஸ் நிறையுள்ள, மாம்பழத்தில் உள்ள உயிர்ச்சத்துக்கள்

| | |
|---|---|
| விற்றமின் A | - 1363.0 மி.கிராம் |
| விற்றமின் $B_1$ | - 11.0 மி.கிராம் |
| விற்றமின் $B_2$ | - 13.0 மி.கிராம் |





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆப்கானிஸ்தான்



தேசிய இலச்சினை




**அரசு:-** ஆப்கானிஸ்தான் இஸ்லாமியக் குடியரசு (Islamic Republic of Afghanistan)

**தேசிய விடுமுறை தினம்:-** சுதந்திர தினம்- ஒகஸ்ட் 19.

**ஜனாதிபதி:-** ஹமீட் கர்ஸாய்- Hamid Karzai

**உப ஜனாதிபதிகள்:-** அஹமட் ஸியா மஷூட், கரீம் காலிலி

**மொத்த நிலப்பரப்பு:-** 250,000 சதுர மைல் (647,500 ச.கி.மீற்றர்)

**மக்கள் தொகை**(2008 உத்தேசம்):- 33,609,937,
சனத்தொகை வளர்ச்சிவீதம்-2.6%,
பிறப்பு வீதம் - 45.8/1000,
சிசு மரணம் - 154.6/1000,
எதிர்பார்க்கும் ஆயுட்காலம் - 44.3.



**தலைநகரம்:-** காபூல் (Kabul)

**பெரிய நகரம்:-** காபூல்

**ஏனைய பெரிய நகரங்கள்:-**
கந்தகார், மஸாரி ஷெரீப், ரிகார், ஹெராட்.

**தேசிய இனம்:-** ஆப்கான்

**சமயம்:-** சுன்னி முஸ்லிம் 80%, ஷியா முஸ்லிம் 19%, ஏனையோர் 1%,

**இனப்பிரிவுகள்:-** பெஷ்டுன் 42%, டஜிக் 27%, ஹஸாரா 9%, உஸ்பெக் 9%, அய்மெக் 4%, துர்க்மென் 3%, பலோச் 2%, ஏனையோர் 4%.

**மொழிகள்:-** டாரி அல்லது பாரசீகம்-பெஷ்டு (உத்தியோகபூர்வ மொழிகள்) தவிர துர்கிக், ஏனைய சிறுபான்மை மொழிகள்.

**நாணயம்:-** ஆஃப்கானி (AFN)

**இணையத்தளக் குறியீடு:-** .af

**சர்வதேச தொலைபேசி எண்:-** 93

**நேரம்:-** UTC+4:30

## அமைவிடம்

கிழக்கு மற்றும் தெற்கு - பாகிஸ்தான், மேற்கு-ஈரான் மற்றும் துர்க்மினிஸ்தான்,வடக்கு-உஸ்பெகிஸ்தான் மற்றும் கிர்கிஸ்தான் என்பன எல்லைகளாக அமைந்துள்ளன. நாட்டின் வடகிழக்கே ஒரு சிறுபகுதி சீனாவை எல்லையாகக் கொண்டுள்ளது.

**காலநிலை:-** வெப்பமான காலநிலையும் குளிர் காலநிலையும் மாறி, மாறி நிலவுகின்றன.

## வரலாறு

7-14 ஆம் நூற்றாண்டுகள் வரை அலெக்சாண்டர், ஜெங்கிஸ்கான், தைமூர் போன்ற அரசர்களின் ஆக்கிரமிப்பிற்கு உட்பட்டிருந்தது. 19 ஆம் நூற்றாண்டில் பிரித்தானியாவுக்கும் ரஷ்யாவுக்கும் இடையிலான போரின் களமானது. 1919 இல் இந்நாடு சுதந்திர நாடாகியது. ஆப்கானிஸ்தானின் அண்மைய வரலாறு போர்களும் உள்நாட்டுக் கலகங்களும் நிறைந்தே காணப்பட்டது. 1979 ஆம் ஆண்டு சோவியத் ஐக்கிய சமவுடமைக் குடியரசின் ராணுவக் கண்காணிப்பிலான ஓர் அரசு அமைந்தது. பத்து வருடங்களின் பின் கம்யூனிஸ்ட் எதிர்ப்பு முஜாகிதீன்களால் பலவந்தமாக அந்த ஆட்சி கலைக்கப்பட்டது. இதனை அடுத்து, பல்வேறு முஜாகிதீன் களுக்கிடையில் உருவான மோதல்கள் தலிபான்களின் ஆட்சிக்கு வழிவகுத்தது. 2001 ஆம் ஆண்டின் பின் அமெரிக்க கூட்டணி மற்றும் வடக்குக் கூட்டணிப்படை களால் 'தலிபான்' ஆட்சி கவிழ்க்கப்பட்ட தோடு, 2001 ஆம் ஆண்டு ஜேர்மனியின் பான் நகரில் நடைபெற்ற மாநாட்டையடுத்து, அரசியல் மறுசீரமைப்பு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டு, 2004 ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தல் நடைபெற்றது.

**கலாசாரம்:-** மத்திய, தென், மத்திய கிழக்காசிய கலாசாரங்களைக் காணலாம்.



ஜனாதிபதி

**பொருளாதாரம்:-** தனிநபர் சராசரி வருமானம் - 800 அமெரிக்க டொலர்,

**பொருளாதார வளர்ச்சிவேகம்:-** 7.5%(2007),

**வேலையற்றோர் வீதம்:-** 40%.

**விவசாயம்:-** (பயிரிடக்கூடிய நிலம் 12.13%):- 'பொப்பி' தாவரத்திலிருந்து எடுக்கப்படும் 'அபினி' எனப்படும் போதைப்பொருள், கோதுமை, பழவகைகள், கடலை வகை பயிர்ச் செய்கைகள்.

**கால்நடை உற்பத்திகள்:-** செம்மறியாட்டு ரோமம், ஆட்டிறைச்சி, செம்மறித்தோல், இளம் செம்மறித்தோல்.

**இயற்கை வளங்கள்:-** இயற்கை வாயு, பெற்றோலியம், நிலக்கரி, செம்பு, க்ரோமைட், கந்தகம், ஈயம், காரீயம், துத்தநாகம், இரும்புத் தாது, உப்பு, விலையுயர்ந்த இரத்தினக்கற்கள்.

**கைத்தொழில்கள்:-** சிறிய புடவை உற்பத்தி, சவர்க்காரம், தளபாடங்கள், பாதணிகள், உர வகைகள், சீமெந்து, கையால் நெய்யப்பட்ட விரிப்புகள், இயற்கை வாயு, நிலக்கரி, செம்பு என்பன.

**ஏற்றுமதிப் பொருட்கள்:-** 'அபினி' எனப்படும் போதை விளைபொருள்,பழவகைகள்,கடலை வகைகள், கையால் நெய்யப் பட்ட விரிப்புகள், செம்மறியாட்டு ரோமம், பருத்தி, விலையுயர்ந்த இரத்தினக்கற்கள்.

**இறக்குமதிப் பொருட்கள்:-** மூலப்பொருட்கள், உணவு வகைகள், புடவை வகைகள், பெற்றோலியப் பொருட்கள்.



**முக்கிய வர்த்தகப் பங்காளிகள்:-** பாகிஸ்தான், ஐக்கிய அமெரிக்கா, இந்தியா, ஜேர்மனி

**தகவல் தொடர்பாடல்:-** தொலைபேசி-பிரதான தொலைபேசிகள் பாவனையாளர் தொகை-280,000(2005), கையடக்கத் தொலைபேசிப் பாவனையாளர்கள்- 2.52 மில்லியன் (2006),

**வானொலி நிலையங்கள்:-** AM 21,FM 5,SW 1 (2006)

**தொலைக்காட்சி ஒளிபரப்பு நிலையங்கள்:-** குறைந்தது 7

**வலைப்பின்னல் பாவனையாளர்கள்:-** 535000 (2006)

## தேசிய கீதம்

Da watan Afghanistan dai,
da ezzat de har Afghan dai
Kor de soli kor de tori,
har bachi ye qahraman dai
Da watan di tolo kor dai,
de Balotso, de Uzbako என ஆரம்பமாகும்.


**தேசிய சின்னங்கள்:-** மலர், மரம், மிருகம், பறவை என்பன தெரிவுசெய்யப்படவில்லை.

**ஆறுகள்:-** அமு டார்யா, ஹரி, ஹெல்மன்ட், காபூல்,

**உயரமான மலை:-** நோஷாக் 24,446ft (7,485m),

**ஏனைய மலைகள் சில:-** அமு டார்யா, இந்துகுஷ், பமீர், கரகோரம்

பாமியன் புத்தர் சிலைகளின் அமைவிடம்



காபூல் நகரின் ஒரு பகுதி



கிழக்கு ஆப்கானிஸ்தான்



**போக்குவரத்துத் துறை:- பெருந்தெருக்கள்:-** 34,782 கிலோ மீற்றர்.

**நீர்வழிப் போக்குவரத்து:-** 1200 கிலோமீற்றர்.

**துறைமுகங்களும் துறைகளும்:-** கெஹராபாத், ஷிர்கான்.

**விமான நிலையங்கள்:-** 50 (2008)

## சிறப்புக்கள்

புராதன காலத்தில் ஆரியர்களின் நாடு எனும் பொருளில் 'ஆர்யானா' என அழைக்கப்பட்டது. பிரபலமான 'கந்தாரக்' கலையின் தாயகம். ஆப்கானியர்கள் குதிரைப் பிரியர்கள். 'புஸ்காஷு' எனும் குதிரைப்பந்தயம் மிகப் பிரபலமான விளையாட்டு. அத்துடன், 'ஆப்கான் ஹவுண்ட்' எனும் பிரபல வேட்டை நாய் இனம் ஆப்கானிஸ்தானிலேயே உருவானது.

**பிரதான இடங்கள்:-** காபூல்-பலாஹிஸார், காபூல் நூதனசாலை, பாபுர் தோட்டங்கள், ஏஆர்ஜி மாளிகை, அழகிய கல்லறைக் கட்டடம்,

**ஹெராட்:-** கவிஞர் ஜாமியின் கல்லறை,

**பாமியன்:-** பாமியன் புத்தர் சிலை அமைவிடம், பண்டே ஆமீர் ஏரிகள்,

**காஸ்னீ:-** இஸ்லாமிய கலைகளின் நூதனசாலை,சர்தார் தூபி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(வினாத்தாள் I இன் தொடர்ச்சி)

பெயர்: ........................................................ நேரம்: 45 நிமிடங்கள்.




* 22 தொடக்கம் 40 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் உரிய சரியான விடையைத் தெரிவு செய்து, அதன் கீழ்க் கோடிடுக.

* **22 ஆம் 23 ஆம் வினாக்கள் கீழே தரப்பட்டுள்ள உருவை அடிப்படையாகக் கொண்டவை. அதில் எல்லா நிரைகளிலும் நிரல்களிலும் 1, 2, 3, 4, 5 ஆகிய இலக்கங்கள் ஐந்தும் இருத்தல் வேண்டும்.**

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 |
| 3 | 4 | 5 | 1 | 2 |
| 5 | ▲ | ● | 3 | 4 |
| 2 | 3 | 4 | 5 | 1 |
| 4 | ■ | ▲ | 2 | 3 |

22. ▲ இற்குப் பொருத்தமான எண் யாது?

(1) 2 (2) 1 (3) 4 (4) 3

23. ■ இற்குப் பொருத்தமான எண் யாது?

(1) 2 (2) 5 (3) 1 (4) 3

24. 2kg 750g நிறையுள்ள தேயிலையில் எத்தனை 250g பெக்கட்டுக்கள் தயாரிக்க முடியும்?

(1) 5 (2) 11 (3) 7 (4) 23

25. ஒவ்வொன்றும் 500g நிறையுள்ள 8 சீனிப் பெக்கட்டுக்கள் 1 kg நிறையுள்ள பெட்டியில் அடைக்கப்படுகின்றன. இப்போது பெட்டியின் நிறை யாது?

(1) 9kg (2) 3kg (3) 1kg 500g (4) 5kg

26. தந்தை, மகன் ஆகிய இருவரினதும் வயதுகளின் கூட்டுத்தொகை 42 வருடங்கள். மகனை விட தந்தை 32 வயது அதிகம். மகனின் வயது யாது?


(1) 12 (2) 10 (3) 15 (4) 5

* **27 ஆம் 28 ஆம் வினாக்களில் உள்ள சொல் வரிசைகளில் ஏனைய சொற்களுடன் பொருந்தாத சொல் இடம்பெறும் வரிசையின் கீழ்க் கோடிடுக.**

27. (1) வெண்டி, தக்காளி, புடோல், பாகல்
(2) கிளி, புறா, பறவை, காகம்
(3) ரோசா, செவ்வரத்தை, செவ்வந்தி, அந்தூரியம்
(4) மேசை, கதிரை, கட்டில், அலுமாரி

28. (1) தென்னை, பனை, கமுகு, கித்துள்
(2) நாய், பூனை, சிங்கம், மிருகம்
(3) வாள், கத்தியல், சீவுளி, துறப்பணம்
(4) கண்டி, மாத்தளை, கொழும்பு, திருகோணமலை

* **பின்வரும் உருக்களைப் பயன்படுத்தி 29 ஆம் 30 ஆம் வினாக்களுக்குரிய விடையைத் தெரிவு செய்க.**



விலை ரூ.120 விலை ரூ.70


29. அப்பிள் பழம் ஒன்றையும் மாம்பழம் ஒன்றையும் வாங்குவதற்கு எவ்வளவு பணம் வேண்டும்?

(1) ரூபாய் 70.00 (2) ரூபாய் 50.00
(3) ரூபாய் 60.00 (4) ரூபாய் 40.00

30. அப்பிள் பழங்கள் 4 இனதும் மாம்பழங்கள் 2 இனதும் விலை யாது?

(1) ரூபாய் 100.00 (2) ரூபாய் 120.00
(3) ரூபாய் 140.00 (4) ரூபாய் 75.00

31. தாவரம், மரம், தென்னை, ரோசா என்பனவற்றுக்கு இடையிலான தொடர்பினைக் காட்டுவதற்கு பின்வரும் உரு வரையப்பட்டுள்ளது. இதில் D இனால் காட்டப்படுவது,




(1) மரம் (2) தென்னை
(3) ரோசா (4) தாவரம்

32. ஒரு வாங்கில் ஆண்பிள்ளைகள் வரிசையாக அமர்ந்திருந்தனர். முன் பக்கத்தில் இருந்து கணக்கிடும்போது, கஜன் 10 ஆவதாக அமர்ந்திருந்தான். பின்பக்கத்திலிருந்து கணக்கிடும்போது, கஜன் 5 ஆவதாக அமர்ந்திருந்தான். வாங்கில் எத்தனை ஆண்பிள்ளைகள் அமர்ந்திருந்தனர்?

(1) 15 (2) 13 (3) 14 (4) 16

* **பின்வரும் ஒவ்வொரு புதிரிலும் மறைந்துள்ள சொல்லைக் கண்டுபிடித்து, அதனைப் புள்ளிக்கோட்டில் எழுதுக.**

33. இது மூன்று எழுத்துக்களைக் கொண்ட சொல்லாகும். முதலாம் எழுத்து கண்ணில் உண்டு; காதில் இல்லை. இரண்டாம் எழுத்து பத்தில் உண்டு; இருபதில் இல்லை. மூன்றாம் எழுத்து திங்களில் உண்டு; செவ்வாயில் இல்லை.

.........................................

34. 'A' என்பவர் 'B' இன் தாய் ஆவார். ஆனால், 'B' என்பவர் 'A' இன் மகன் அல்ல. அப்படியாயின் 'B' யார்?

.........................................

35. ஒரு விருந்தில் எட்டுப் பேர் கலந்துகொண்டனர். ஒவ்வொருவரும் ஒவ்வொருவரோடு கை குலுக்கிக் கொண்டால், அங்கு எத்தனை கைகுலுக்கல்கள் நிகழ்ந்திருக்கும்?


.........................................

36. பின்வரும் குறுக்கெழுத்துப் புதிரிலிருந்து இடமிருந்து வலமாகவும் மேலிருந்து கீழாகவும் கருத்துள்ள சொற்களை அமைக்க. இப்புதிரை விடுவிக்க தரப்பட்டுள்ள உதவிக் கூற்றுக்களைப் பயன்படுத்துக.

**இடமிருந்து வலம்**
1. இவற்றுக்கு இறகு உள்ளது.
4. நாள் என்பதன் ஒத்த சொல்.


**மேலிருந்து கீழ்**
2. உலகம் என்பதன் ஒத்த சொல்.
3. கைது செய்யப்பட்டவர்.

| | | |
|---|---|---|
| 1 | | 2 |
| | | |
| 3 | | |
| 4 | | |

37.  இவ்வுருவில் உள்ள சதுரங்களின் எண்ணிக்கையை எழுதுக.

.........................................

* **கீழே காணப்படும் அடங்கல் வரைபடத்தை அவதானித்து, 38 முதல் 40 வரை உள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் உரிய விடையை புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.**




38. வாழைப்பழத்தை மட்டும் விரும்பும் பிள்ளைகள் எத்தனை பேர்?

.........................................

39. அப்பிள் பழத்தை விரும்பும் பிள்ளைகள் எத்தனை பேர்?

.........................................

40. மூன்று பழங்களையும் விரும்பும் பிள்ளைகள் எத்தனை பேர்?


.........................................

வினாத்தாள் I இன் விடைகள் அடுத்த இதழில் வெளிவரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீர் நிறைந்

**உலகின் எல்லாப் பகுதிகளும் ஒரே மாதிரியாக அமைந்திருப்பதில்லை. அவை சமவெளிகள், மலைகள், நீர்நிலைகள், பாலைவனங்கள் என வெவ்வேறு பௌதீக தோற்றங்களைக் கொண்டு காணப்படுகின்றன. இவ்வனைத்து தரைத்தோற்ற அம்சங்களும் உலகின் இருப்பிற்கு மிகவும் அத்தியாவசியமானதாகும். அந்த வகையில் இயற்கையின் கொடைகளில், நீர்நிலைகளின் வடிவங்களில் ஒன்றாகிய ஏரியைப் பற்றிய சில தகவல்களைப் பார்ப்போம்.**



ஏரிகளை உருவாக்கும் பீவர்

## ஏரியின் உருவாக்கம்

ஏரி என்பது நீர் நிறைந்த-விசாலமான-தாழ்வான அல்லது பள்ளமான பிரதேசத்தில் அமைந்துள்ள நீர் நிலையாகும். கடும் மழையின் பின், மணற்பரப்பில் ஏற்படும் சிறிய பள்ளமானது நீரால் நிறைந்து விடுவதன் காரணமாக தற்காலிக ஏரி உருவாகின்றது. எனினும், அது நிரந்தர ஏரியாக நிலைத்திருக்க வேண்டுமாயின்; ஆவியாகி மேலெழுந்து செல்லும் நீரின் அளவைவிட, அதிகளவு நீர் ஆவியாகாமல் தேங்கி இருக்க வேண்டும். தேங்கி இருக்கும் நீரின் அளவிற்கேற்ப குறித்த இடத்தின் ஆழம் அல்லது பள்ளம் அமைந்திருக்கவேண்டும்.

## ஏரியின் அளவு

மிகச் சிறிய ஏரியானது குளம் அல்லது தடாகத்தை விட விசாலமானதன்று. எனினும், பெரிய ஏரியானது மிகப்பாரிய அளவில் பரந்து-விரிந்து காணப்படும். இத்தகைய விசாலமான ஏரியை சிலவேளைகளில் கடல் என்றும் அழைக்கின்றோம். இதற்கு சிறந்த உதாரணமாக; 'கஸ்பியன்' கடலைக் குறிப்பிடலாம். உண்மையில் 'கஸ்பியன்' ஓர் ஏரியாகும். ஆனால், நாம் அதனை 'கஸ்பியன் கடல்' என்றே அழைக்கின்றோம்.

## உலகின் ஏரிகள்

உலகிலுள்ள ஏரிகளில் அதிகமானவை பாய்ந்தோடும் நதிகளால் நீரைப் பெறும் 'நன்னீர்' ஏரிகளே. எனினும்,

மழைவீழ்ச்சி குறைவாகக் கிடைக்கின்ற, நீராவியாகும் தன்மை அதிகமாக உள்ள பிரதேசங்களில் கடலை நோக்கி ஓடும் ஆறுகள் ஒரு சிலவே இருக்கின்றன. இத்தகைய சில நதிகள் உட்புறமாகவே பாதைகளை அமைத்து, ஏரிகளில் கலக்கின்றன. இங்கு அதிகளவு நீர் ஆவியாதல் செயற்பாட்டுக்கு உட்படுவதால் அவற்றின் நீர் உவர்த்தன்மையை அடைகின்றது. 'சாக் கடல்' இதற்கு சிறந்த உதாரணமாகும்.

## மனித வாழ்வுடன் இரண்டறக் கலந்த ஏரிகள்

ஏரிகளால் மனித சமுதாயத்திற்குக் கிடைக்கும் பயன்கள் ஏராளம். மனிதக் குடியேற்றங்கள், வர்த்தக நடவடிக்கைகள், கனியங்கள் மற்றும் தொடர்பாடல் என்பன நீரியல் வளத்திட்டங்களுடன் மிக நெருங்கிய தொடர்பினைக் கொண்டவையாகும். இதற்குத் தக்க உதாரணமாக; வடஅமெரிக்காவின் பிரதான தொடர்பாடல் மற்றும் போக்குவரத்து மார்க்கமாக விளங்கும் ஐம்பெரும் ஏரிகளைக் (பஞ்ச வாவிகள்) குறிப்பிடலாம். அமெரிக்காவின் மத்தியில் காணப்படும் சுப்பீரியர் (Superior), மிச்சிக்கன் (Michigan), ஹியூரன் (Huron), ஈரி (Erie), ஒன்டாரியோ (Ontario) ஆகிய ஐந்து ஏரிகளையே 'பஞ்ச வாவிகள்' என அழைக்கின்றனர்.

இவ்வேரிகளின் கரைகளில் பல்வேறு கனிய வளங்கள் நிறைந்து காணப்படுவதோடு, நிலக்கரி, இரும் புத்தாது உள்ளிட்ட பல கனிய வளங்கள், இயந்திரங்கள், தானிய வகைகள், விலங்கு வேளாண்மை விளை பொருட்கள் உள்ளிட்ட பல்வேறு ஏற்றுமதி, இறக்குமதிச் செயற்பாடுகள் இவ் ஏரிகளினூடாகவே நடைபெறுகின்றன.



மனிதனால் அமைக்கப்பட்ட ஏரியொன்று



ஒரிகொன் ஏரி

## ஏரிகளின் ஏனைய பயன்பாடுகள்

- பொருளாதார மற்றும் கைத்தொழில் அபிவிருத்திக்கு உதவுதல்.
- வீட்டின் நீர் தேவைகளைப் பூர்த்தி செய்தல்.
- நீர் மின் சக்தியை உற்பத்தி செய்தல்.
- விவசாயம், நீர்ப்பாசன நடவடிக்கைகளுக்காகப் பயன்படுகின்றமை.
- வெள்ளப்பெருக்கு மற்றும் நதிப்பெருக்கைக் கட்டுப்படுத்தல்.
- காலநிலையை சமப்படுத்துதல்.
- உணவு வழங்கல் மற்றும் வணிக வழங்கலின் மூலாதாரமாகவும் விளங்கல்.



பனிப்பாறை ஏரி

**உங்களுக்குத் தெரியுமா?**

- உலகிலேயே மிகவும் உயரமான இடத்தில் அமைந்துள்ள ஏரி-டிட்டிக்காக்கா (தித்திக்காகா) ஏரி. இது தென்அமெரிக்காவின் 'அந்தீஸ்' மலை மீது 12,500 அடி உயரத்தில் அமைந்துள்ளது.
- உலகிலேயே மிகப்பெரிய பரப்பளவைக் கொண்ட ஏரியாக கருதப்படும் 'கஸ்பியன் கடல்' 143,550 சதுர மைல் பரப்பளவைக் கொண்டதோடு, அது 'சுப்பீரியர்' ஏரியிலும் ஐந்து மடங்கு பெரியதாகும்.
- உலகிலேயே மிக ஆழமான (4700 அடி) ஏரியாக கிழக்காபிரிக்காவில் அமைந்துள்ள 'தங்கனிக்கா ஏரி' காணப்படுகின்றது.

ஏரி… தோன்… பனிப்… எரிம… மனித… செயற்… முக்கி…

புவி… சுருக்க… உள்ளி… பள்ள… இப்ப… கட்டிக… ஏரிகள்…

பல… போது… பெய… அப்பி… அதில்… கின்ற… ஐம்பெ… உதார…

எரி… தோன்… நீண்ட… காதப…

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ந்த ஏரியின் கதை







பைக்கால் ஏரி


சாக் கடல்


மாகைபோ ஏரி


சுப்பீரியர் ஏரி

ஏரிகள் பல காரணங்களால் தோன்றுகின்றன. புவி அசைவு, பனிப்பாறை (க்ளெசியர்) நகர்வு, எரிமலை வெடிப்பு, நிலப்பிளவு, மனிதன் மற்றும் உயிரினச் செயற்பாடுகள் என்பன அவற்றில் முக்கியமானவையாகும்.

## ஏரிகளின் தோற்றம்

### புவி அசைவு ஏரி

புவியின் மேற்பரப்பில் ஏற்படும் சுருக்கம், வளைவு, உடைவு, தகர்வு உள்ளிட்ட பல காரணங்களால் பள்ளத்தாக்குகள் ஏற்படுகின்றன. இப்பள்ளத்தாக்குகளில் பனிக் கட்டிகள் உருகி அல்லது நீர்தேங்கி ஏரிகள் உண்டாகின்றன.

### பனிப்பாறை ஏரி

பனிப்பாறைகள் உருகி, நகரும் போது அவை நிலப்பகுதியையும் பெயர்த்துக்கொண்டு வருவதால், அப்பிரதேசம் பள்ளமாகின்றது. அதில் பனிநீர் உருகி ஏரியாக மாறுகின்றது. ஐக்கிய அமெரிக்காவின் ஐம்பெரும் வாவிகள் இதற்கு சிறந்த உதாரணமாகும்.

### எரிமலை வெடிப்பு ஏரி

எரிமலை வெடிப்பின் காரணமாக தோன்றும் பள்ளத்தில், மீண்டும் நீண்டகாலத்துக்கு எரிமலை வெடிக் காதபட்சத்தில், அதில் பனிநீரோ அல்லது நீரோ தேங்கி ஏரிகள் உண்டாகின்றன. உதாரணத்திற்கு; தென் அமெரிக்காவின் 'அந்தீஸ்' மலையில் அமைந்துள்ள உலகின் மிக உயரமான ஏரியாகிய 'தித்திக்காக்கா' ஏரியைக் குறிப்பிடலாம்.

### சுண்ணக்கற்பாறை ஏரி

சுண்ணாம்புக் கற்பாறை நிறைந்த பிரதேசத்தில் ரசாயனத் தாக்கம் உள்ளிட்ட பல்வேறு காரணங்களால் கரைசல் ஏற்பட்டு, அதனால் ஏற்படும் துவாரம் வழியாக நீர் உள்ளே செல்கின்றது.அப்போது,கற்பாறையின் மேற்பகுதி சுண்ணாம்பு கற்கூரை போன்று இருக்கும். இதன் அடிப்பகுதியில் குகைகள் தோன்றுகின்றன. காலப் போக்கில் கரைசல் பெருகி, கூரை உடைந்து விழ, அதனால் ஏற்பட்ட பள்ளத்தில் நீர் நிறைந்து ஏரி உருவாகின்றது.

### காற்றினால் ஏற்படும் ஏரி

பாலைவனங்களில் தாவரமோ, மரங்களோ இல்லாத காரணத்தால் மிக வேகமாக வீசும் காற்று நிலத்தைப் பறித்து பள்ளத்தை உண்டாக்குகின்றது. இந்த அரிப்பும் செயற்பாடும் சில வேளைகளில் தொடர்ந்து நிலக்கீழ் நீர் வரை செல்லும். அச்சந்தர்ப்பங்களில் அப்பள்ளத்தில் நிலக்கீழ் நீர் நிறைந்து ஏரிகள் உண்டாகும்.

### ஆற்றங்கரையை அண்மித்த ஏரி

வளைந்து செல்லும் ஆறானது கடலை அண்டிய சமவெளியில் செல்லும்பொழுது அதன் பாதையை குறுகிச் செல்ல எத்தனிக்கும். அச்சந்தர்ப்பத்தில் ஏரிகள் உண்டாக வாய்ப்புண்டு.

### கடற்கரைப்பகுதியில் உருவாகும் ஏரி

கடலோரங்களில் ஏற்படும் களப்பு, பின்னொரு காலத்தில் ஏரியாக உருவாகும் வாய்ப்புண்டு.

### மண்சரிவு மற்றும் பனி நகர்வால் ஏற்படும் ஏரி

பாய்ந்தோடும் நீருக்குக் குறுக்கே சில வேளைகளில் பாரிய மண் சரிவு ஏற்பட்டு, உயர்ந்த மண் சுவர் போல் தடைப்பட்டு ஏரிகள் உண்டாகின்றன. அதேபோல், ஓடும் நீருக்கு குறுக்கேயான பனிக்கட்டி நகர்வுகளும் ஏரியைத் தோற்றுவிக்கும்.

### விண்கற்களால் ஏற்படும் ஏரி

பாரிய விண்கற்கள் விழுந்து, பாரிய கிடங்குகள் உருவாகின்றன. அக்கிடங்குகளில் நீரோ, பனியோ உருகி-தேங்கி நின்று ஏரிகள் உருவாகின்றன.

### கீழிறங்கும் நிலத்தில் ஏரி

நிலம் படிப்படியாக கீழிறங்கும் போதும் ஏரிகள் உருவாக வாய்ப்புண்டு.

### மனிதன் மற்றும் உயிரினங்களின் செயற்பாடுகளினால் ஏற்படும் ஏரிகள்

மனிதனால் செயற்கையாக உருவாக்கப்படும் ஏரிகள் உலகெங்கும் உள்ளன.பாய்ந்தோடும் நீரைமறித்து, 'கொங்ரீட்' அணைகட்டி, அதன்மூலம் நீர்த்தேக்கங்கள் கட்டுப்படுகின்றன. இவை அனைத்தும் ஒருவகையில் ஏரிகளே. இத்தகைய ஏரிகள் பலவற்றை இலங்கையிலும் காணலாம்.

### பீவர் உருவாக்கும் ஏரி

ஏரியை உருவாக்குவதில் பீவர் (Beaver) எனும் விலங்கினம் முக்கிய இடத்தை வகிக்கின்றது.அது மரங்கள் கம்புகள்,மரக்குற்றிகள் ஆகியவற்றை பயன்படுத்தி, ஓடும் நீருக்குக்குறுக்கே அணை அல்லது வேலியை அமைத்து ஏரிகளை உருவாக்குகின்றது.

## ஏரிகள் நிலையற்றவை

ஏரிகளின் தோற்றம் தற்காலிகமானவை. இதற்கு பல காரணங்கள் உள்ளன.

- நீர் பெருகி வெளியேறல்.
- பிற பொருட்கள் ஏரியில் கலத்தல்.
- மழைவீழ்ச்சி குறைவாகக் கிடைக்கும் பிரதேசங்களில் அமைந்துள்ள ஏரிகள் கோடைகாலத்தில் முற்றாக வறண்டு விடல். குறிப்பாக, பாலைவனங்களில் அதிகளவு நீர் ஆவியாதல், நீர் வெளியேற்றம், நீர் உறிஞ்சிக் கொள்ளப்படல் போன்ற காரணங்களால் ஏரிகள் மறைந்து விடுகின்றன.

எவ்வாறாயினும், ஏரியொன்று உருவானதன் பின்னர் அது மறைந்து விடுவதற்கு நீண்ட காலம் எடுக்கின்றது.

-இரஞ்சித் ஜெயகர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தெய்வத்தாய்

வித்தாய் மடியில் வைத்தாய்; மாதங்கள்
பத்தாய்ச் சுமந்தெனைப் பெற்றாய்!

முத்தாய் முல்லைக் கொத்தாய்க் கொஞ்சி
மொய்த்தாய்; நல்ல பெயரை வைத்தாய்!

சத்தாய் உணவைச் சமைத்தாய்; பிள்ளை
சமர்த்தாய் உண்ணச் செய்தாய்!

பித்தாய்க் கிடந்து பொழிந்தாய் அன்பை
தாயே என் தெய்வத் தாயே!

பாத்திமா மின்சா,
க/உடபிடிய அல் ஹுஸ்னா
மு.ம.வித்.,
பள்ளேகம தெல்தோட்டை.

# தலைக்கனம்



அது ஓர் அழகிய கிராமம். அதில் ஒரு பெரிய பாடசாலை. அந்தப் பாடசாலையில்தான் செல்வந்தர் ராமசுந்தரத்தின் மகன் சோமுவும் கல்வி கற்று வந்தான். அவன் பணத்தில் மட்டுமல்ல படிப்பிலும் முதன்மை தான். ஒவ்வொரு முறையும் வகுப்பில் முதலாம் பிள்ளையாக வந்துவிடுவான். இதனால், அவனுக்குத் தலைக்கனம் அதிகம். யாரையும் மதிப்பதில்லை. வகுப்பு மாணவர்களோ,அவனை வெல்லவும் முடியாமல் எதுவும் சொல்லவும் முடியாமல் இருந்தனர். சில காலத்துக்குப் பின் அப்பாடசாலைக்கு நடுத்தரக் குடும்பத்தைச் சேர்ந்த ராஜா என்னும் மாணவன் வந்து சேர்ந்தான். ராஜா புத்திசாலி. எல்லோருடனும் அன்பாகப் பழகுவான். வந்த சில காலத்திலேயே எல்லோரையும் நண்பர்களாக்கிக் கொண்டான். அத்துடன், தன்னுடன் படிக்கும் ஏழை மாணவர்களுக்கு கல்வி கற்பதில் உதவியும் புரிந்து வந்தான். தனியார் வகுப்புகளுக்கு செல்ல வசதியற்ற மாணவர்களுக்கு ஓய்வு நேரங்களில் அன்புடன் பாடமும் சொல்லிக்கொடுத்தான். படிப்பில் குறைந்த மாணவர்களெல்லாம் அவனுடன் சேர்ந்து நன்றாகப் படிக்கலாயினர்.




விளையாட்டுக்களிலும் திறமைகளைக் காட்டினர்.

மூன்றாம் தவணைப் பரீட்சையும் வந்தது. எல்லோரும் பரீட்சையை நம்பிக்கையோடு எழுதி முடித்தனர். சோமுவும் தான் இம்முறையும் முதலாம் பிள்ளையாகி விடலாம் என்று நினைத்தான். ஒரு வாரத்தின் பின் எல்லா மாணவர்களுக்கும் புள்ளி அறிக்கை (ரிப்போர்ட்) தரப்பட்டது. அனைத்து மாணவர்களும் அதிக புள்ளிகள் பெற்றிருந்தனர். அந்தவகையில் ராஜா வகுப்பில் அதிகூடிய புள்ளிகள் பெற்று முதலாம் பிள்ளையானான். அத்துடன், மற்றும் சில மாணவர்கள் சோமுவை விடவும் அதிக புள்ளிகள் பெற்றிருந்தனர். சோமுவுக்கு இது மிகுந்த வியப்பையும் வெட்கத்தையும் ஏற்படுத்தியதோடு அவனுடைய தலைக்கனமும் ஒழிந்தது. தனது தலைக்கனத்தால் நிலைமை மாறியதைப் புரிந்துகொண்ட சோமு ராஜாவிடமும் நண்பர்களிடமும் மன்னிப்புக் கேட்டுக் கொண்டு எல்லோருடனும் அன்பாகப் பழகலானான்.

துரைசிங்கம் வினோ,
இ/பாலர் இயேசு கன்னியர் மடம்,
இரத்தினபுரி.



# நூல்களும் இயற்றியவர்களும்

| | |
|---|---|
| கந்தபுராணம் | - கச்சியப்ப சிவாச்சாரியார் |
| சீறாப்புராணம் | - உமறுப்புலவர் |
| கீதாஞ்சலி | - இரவீந்திரநாத் தாகூர் |
| சாகுந்தலம் | - காளிதாசன் |
| இயேசு காவியம் | - கவிஞர் கண்ணதாசன் |
| அர்த்த சாஸ்திரம் | - கௌடில்யர் |
| பெரிய புராணம் | - சேக்கிழார் |
| நளவெண்பா | - புகழேந்திப் புலவர் |
| தொல்காப்பியம் | - தொல்காப்பியர் |
| கொன்றை வேந்தன் | - ஔவையார் |
| மகாபாரதம் | - வியாசர் |
| பாஞ்சாலி சபதம் | - சுப்பிரமணிய பாரதியார் |
| சத்திய சோதனை | - மகாத்மாகாந்தி |
| திருப்புகழ் | - அருணகிரிநாதர் |
| சகுந்தலை வெண்பா | - நடேசபிள்ளை |
| இராமாயணம் | - வால்மீகி |

தொகுப்பு: ஏ.மஸ்ஹுதா பேகம், அக்/பொத்துவில் அல்-இர்பான் வித்., பொத்துவில்.



# வாழ்க்கையில் முன்னேற...

ஊர்ந்து செல்லும் எறும்பு சிறிது நேரம் கூட சோம்பலாக இருப்பதில்லை. அது சுறுசுறுப்புடனேயே இயங்குகின்றது. அதனால்தான் சுறுசுறுப்புக்கு எறும்பை உதாரணமாகக் கூறுகின்றனர். சுறுசுறுப்பாக இயங்கும் இந்த எறும்புகள் தம் எதிர்காலத்தைப் பற்றியும் சிந்திக்கின்றன. தமக்குத் தேவையான உணவை முன்கூட்டியே சேகரித்து வைத்துக் கொள்கின்றன. ஆனால், சோம்பலை வளர்த்துக் கொள்ளும் பகுத்தறிவுள்ள மனிதர்களில் சிலருக்கு எதிர்காலம் பற்றிய சிந்தனையே இருப்பதில்லை. இன்றைய பொழுது இன்பமாகக் கழிந்தால் போதும் என்று எண்ணும் மனிதனின் வாழ்வு சீராக அமைவதில்லை. சிந்திக்கத் தெரிந்தும் சிந்திக்காத மனிதனின் வாழ்வில் செழிப்பைக் காணமுடியாது.

மனிதன் தனது சிந்தனைக் குதிரையை எப்போதுமே தட்டிவிட வேண்டும். ஒவ்வொரு மனிதருக்கும் ஒவ்வொரு லட்சியம் இருக்கவேண்டும். லட்சியம் இல்லாதவரின் வாழ்க்கை சுக்கான் இல்லாத படகுக்குச் சமமாகும். அது அங்கும் இங்கும் அலைந்து முடிவில் பாறையில் மோதித் தன்னைத்தானே அழித்துக் கொள்ளும். ஆகவே, ஒவ்வொரு மனிதனும் உற்சாகத்துடனும் ஊக்கத்துடனும் விடாமுயற்சியுடனும் செயற்பட வேண்டும்.

மொஹமட் அஷ்கர்,
கா/ஸாஹிரா தே.பாட.,
கிந்தோட்டை.

# அதனால்தானோ என்னவோ!









✸ மின்குமிழைக் கண்டுபிடித்த விஞ்ஞானி தோமஸ் அல்வா எடிசனுக்கு இருளைக் கண்டால் பயமாம். அதனால்தானோ என்னவோ அவர் மின்குமிழைக் கண்டுபிடித்தார்.

✸ 'மோனாலிசா' என்ற உலகப் பிரசித்தி பெற்ற ஓவியத்திற்கு கண்ணோடு ஒட்டிக் காணப்படும் இமைகள் இல்லை. அதனால்தானோ என்னவோ அந்த ஓவியத்தின் அழகை விரும்புவோர் அதனை இமை வெட்டாமல் ரசிக்கின்றனர்.

✸ உலகைச் சிரிக்க வைத்த சார்ளி சப்ளினுக்கும் உலகை அழ வைத்த ஹிட்லருக்கும் அரை மீசை. அதனால்தானோ என்னவோ சிரிப்புக்கும், அழுகைக்கும் நிறையத் தொடர்புள்ளது என்று கூறுகின்றனர்.

நி.ப.அய்மா, கமு/அல்-ஹம்றா வித்., மருதமுனை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாதம் ஒரு தலைப்பிலான உங்கள் கைவண்ணங்கள்

## எனது செல்லப்பிராணி



ஹிபாஸ் அஹமட்,
தரம் - 1,
மட்/ஹிழுறியா வித்.,
காத்தான்குடி-01.



எம்.அஸாத்,
தரம் - 4,
ஓர்ச்சட்வத்த மு.வித்.,
நிட்டம்புவ.

## எனது பூந்தோட்டம்



எம்.எஃப்.ஆர்.தலீலா,
தரம் - 4,
கமு/மருதமுனை அல்-மதீனா
வித்., மருதமுனை.



எம்.ஷஹீட் அன்வர்,
தரம் - 3,
அல்-அதான் ம.வித்.,
பதுளை.

## துணி அலங்காரம்



ருஸ்னா புஹாரி,
தரம் - 7,
அல்-ஹஸனியா ம.வித்.,
மக்கொனை.



எஃப்.டில்ஹாஸா அமீர்,
தரம் - 8,
பாத்திமா மகளிர் ம.வித்.,
புத்தளம்.

## வயலில் வேலை செய்வோர்



எம்.ஆர்.எஃப்.இல்மா,
தரம் - $9^{B}$,
க/வெலம்பொட மு.ம.வித்.,
வெலம்பொட.




வினோ துரைசிங்கம்,
தரம் - $9^{T}$,
பாலர் இயேசு கன்னியர் மடம்,
இரத்தினபுரி.



எஹலியகொடை, அஸ்கங்குலையைச் சேர்ந்த நியாஸ்-ஹம்சியா தம்பதியரின் புதல்வி ஹப்ஸா, 06.05.2009 அன்று தனது முதலாவது பிறந்த தினத்தைக் கொண்டாடினார். இவரைக் குடும்பத்தினர் உட்பட உறவினர்கள் அனைவரும் அல்லாஹ்வின் அருளால் பல்கலையும் கற்று, சிறப்பாக வாழ வாழ்த்துகின்றனர்.

(தகவல் : எம்.நியாஸ்)



யக்கஸ்முல்லையைச் சேர்ந்த முனவ்பர்-சித்தி நிஸா தம்பதியரின் செல்வப் புதல்வர்களான முஹம்மட் பஹத், பாத்திமா நுஹா ஆகியோர் தமது மூன்றாவது பிறந்தநாளை 09.05.2009 அன்று கொண்டாடினார்கள். இவர்களை குடும்பத்தினர் அனைவரும் அல்லாஹ்வின் அருளால் பல்கலையும் கற்று, சிறப்பாக வாழ வாழ்த்துகின்றனர்.



பேருவளை, பாக்கிர் மாகார் ஒழுங்கையைச் சேர்ந்த ஸப்ராஸ்-நஸ்மியா தம்பதியரின் செல்வப் புதல்வன் மொஹமட் ஸஹ்ரான், தனது இரண்டாவது பிறந்த தினத்தை 02.05.2009 அன்று தனது இல்லத்தில் விமர்சையாகக் கொண்டாடினார். இவரைக் குடும்பத்தினர் அனைவரும் அல்லாஹ்வின் அருளால் சிறப்பாக வாழ வாழ்த்துகின்றனர்.

(தகவல் -மர்ஸியா நாபிர்)



நிந்தவூர்-11 ஐச் சேர்ந்த அலியார்-நசிறா தம்பதியரின் புதல்வன் அப்துல்லாஹ் ஆஸிஃப், தனது ஒன்பதாவது பிறந்தநாளை 03.05.2009 அன்று தனது இல்லத்தில் கொண்டாடினார். இவரைக் குடும்பத்தினர் அனைவரும் பல்கலையும் கற்று, சிறப்பாக வாழ வாழ்த்துகின்றனர்.

விஜய் 'விரா உலா'
த.பெ.எண் 2037
கொழும்பு



கைவண்ணங்கள்
த.பெ.எண் 2037
கொழும்பு




ஏ.ஹரிஹரன், தரம் - 6,
இந்துக் கல்., கொழும்பு-04.



ச.கோபிகிருஷ்ணா,
தரம் - 4,
யா/புனித ஜோன்
பொஸ்கோ வித்.,
யாழ்ப்பாணம்.



ஆர்.யோபிஷாலினி,
தரம் - 10,
நு/கொட்டகலை
த.ம.வித்.,
கொட்டகலை.



எம்.மில்ஹான்,
தரம் - 11,
அல்-பஹ்ரியா
ம.கல்.,
பாணந்துறை.

## மே 10 ஆம் திகதி அன்னையர் தினம்



## என்னென்று புகழ்வேன் ஒரே நாளில் நான் உன்னை...?

உலகெங்கிலும் ஒரே தினத்தில்
உனைப்போற்றி அடங்கி விட;
நான் மட்டும் ஒரே நாளில் உனைப் போற்றி
அடங்கி விட ஏனோ தவிக்கிறேன்....?

கருவறையில் எனைச் சுமந்து,
பக்குவமாய் எனை ஈன்று,
கருணையுடன் கையிலேந்தி,
பாலூட்டி வளர்த்தவளே...!

நிலையற்ற இவ்வுலகில்
நிலைத்திடும் உன் புகழ் பாட,
நல்வார்த்தைகளெல்லாம்
நான் முந்தி நீ முந்தி என முண்டியடிக்க

என்னென்று புகழ்வேன்
ஒரே நாளில் நான் உன்னை.....

அழகான உன்னை படம் வரைய எண்ணி,
நிறங்கள் பலவும் எடுத்திட்டபோதும்
உன் அழகுக்கு அழகூட்ட முடியாமல்
நானும் இங்கே தோற்றுவிட்டேன்.

அன்று உன் பொறுமையை
பூமிக்கு ஒப்பிட்ட நான்,
இன்று அதுவே பூமியின் பொறுமையிலும்
மேலென்று உணர்ந்திட்டேன்.

படைப்புகளில் என்றும் நீயே முதலிடத்தில்
மாறாத அன்புண்டு என்றும் உன்னிடத்தில்
தாயின்றி பெரும் சொத்தேது நம்மிடத்தில்
என்றும் உனைப் போற்றிடுவோம்
இவ்வையகத்தில்...

-துலானி குமார்,
(கொட்டகலை)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# ආයුබෝවන්
# ஆயுபோவன்
# வணக்கம்

**இன்றைய பாடத்தில் தபால் அலுவலகத்தில் நடைபெறும் ஓர் உரையாடலைப் பார்ப்போம்.**

கலாபூஷணம் கே.என்.டி.பீரிஸ்

ආනන්ද: මට මනිඕඩර් ෆෝර්ම් එකක් දෙන්න.
மட மணிஓடர் ஃபோர்ம் எகக் தென்ன.
ஆனந்த: எனக்கு காசுக்கட்டளை படிவம் ஒன்று தாருங்கள்.

මේ මනිඕඩරය යවන්න කීයක් ගන්නවාද?
மே மணிஓடரய யவன்ன கீயக் கண்ணவாத?
இந்தக் காசுக்கட்டளையை அனுப்ப எவ்வளவு செலவாகும்?

තැපැල්පති: මනිඕඩරය කාටද යවන්නේ?
மணிஓடரய காடத யவன்னே?
தபால் அதிபர்: காசுக்கட்டளையை யாருக்கு அனுப்புகின்றீர்கள்?

ආනන්ද: එස්. ධර්මරත්න.
எஸ்.தர்மரத்ன.
ஆனந்த: எஸ்.தர்மரத்ன.

තැපැල්පති: ලිපිනය කියන්න.
லிபினய கியன்ன.
தபால் அதிபர்: முகவரியைச் சொல்லுங்கள்.

ආනන්ද: නො. 21, ඇවරියවත්ත, වත්තල.
நொ.21 எவரியவத்த, வத்தள.
ஆனந்த: இல-21, எவரியவத்த, வத்தளை.



තැපැල්පති: මනිඕඩර යවන්නේ කවුද?
மணிஓடரய யவன்னே கவுத?
தபால் அதிபர்: காசுக்கட்டளையை அனுப்புபவர் யார்?

ආනන්ද: ආනන්ද පෙරේරා.
ஆனந்த பெரேரா.
ஆனந்த: ஆனந்த பெரேரா.

තැපැල්පති: හොඳයි, මට රුපියල් විසිපහක් දෙන්න.
ஹொந்தய், மட ருபியல் விசிபஹக் தென்ன.
தபால் அதிபர்: நல்லது, எனக்கு இருபத்தைந்து ரூபா தாருங்கள்.

ආනන්ද: මෙන්න සල්ලි.
மென்ன சல்லி.
ஆனந்த: இதோ காசு.

## பயிற்சி

**பின்வரும் வாக்கியங்களைச் சிங்களத்தில் மொழி பெயர்க்க.**

உதா: எனக்கு காசுக்கட்டளை படிவம் ஒன்று தாருங்கள்.
මට මනිඕඩර් ෆෝර්ම් එකක් දෙන්න.

i. காசுக்கட்டளையை யாருக்கு அனுப்புகின்றீர்கள்?
..........................................................

ii. முகவரியை சொல்லுங்கள்.
..........................................................

iii. இருபத்தைந்து ரூபா தாருங்கள்.
..........................................................






'**Were**' எனும் இறந்தகால துணை வினைச்சொல்லுடன் (Past Tense Auxiliary Verb) நிகழ்கால எச்சவினைச் சொல் (Present Participle) கையாளப்பட்டு அமைக்கப்பட்ட 'உடன்பாடு' வாக்கியங்களை 'வினா' வாக்கியங்களாக மாற்றியமைக்கும் முறை.

(அ) you were crying.
நீ அழுதுகொண்டு இருந்தாய். (உடன்பாடு)

(ஆ) Were you crying?
நீ அழுதுகொண்டு இருந்தாயா? (வினா)

**குறிப்பு:** மேற்படி 'உடன்பாடு' நிலை வாக்கியத்தில் 'were' எனும் வினைச் சொல்லும், 'crying' எனும் வினைச்சொல்லும் காணப்படுகின்றன அல்லவா? இவற்றில் 'were' எனும் வினைச் சொல்லை மாத்திரம், அவ்வாக்கியத்தின் முன்னிலையில் இடம்பெயர்த்து வைப்பதன் மூலம், அவ்வாக்கியம் 'வினா' வாக்கியமாக மாற்றமடைகின்றது என்பதை அவதானிக்கலாம்.

மேலும் உதாரணங்களை இங்கே பயில்வோம்.

(அ) You were studying.
நீ படித்துக்கொண்டு இருந்தாய். (உடன்பாடு)

(ஆ) Were you studying?
நீ படித்துக்கொண்டு இருந்தாயா? (வினா)

(இ) You were studying last night.
நீ கடந்த இரவு படித்துக்கொண்டு இருந்தாய். (உடன்பாடு)

(ஈ) Were you studying last night?
நீ கடந்த இரவு படித்துக்கொண்டு இருந்தாயா? (வினா)

(அ) You were eating bread.
நீ பாண் சாப்பிட்டுக்கொண்டு இருந்தாய். (உடன்பாடு)

(ஆ) were you eating bread?
நீ பாண் சாப்பிட்டுக்கொண்டு இருந்தாயா? (வினா)

---

(அ) They were playing.
அவர்கள் விளையாடிக்கொண்டு இருந்தார்கள். (உடன்பாடு)

(ஆ) Were they playing?
அவர்கள் விளையாடிக்கொண்டு இருந்தார்களா? (வினா)

(அ) They were laughing.
அவர்கள் சிரித்துக்கொண்டு இருந்தார்கள். (உடன்பாடு)

(ஆ) Were they laughing?
அவர்கள் சிரித்துக்கொண்டு இருந்தார்களா? (வினா)

(அ) They were swimming.
அவர்கள் நீந்திக்கொண்டு இருந்தார்கள். (உடன்பாடு)

(ஆ) Were they swimming?
அவர்கள் நீந்திக்கொண்டு இருந்தார்களா? (வினா)

---

(அ) The children were crying.
அந்தப் பிள்ளைகள் அழுதுகொண்டு இருந்தன. (உடன்பாடு)

(ஆ) Were the children crying?
அந்தப் பிள்ளைகள் அழுதுகொண்டு இருந்தனவா? (வினா)

(இ) Were the children crying last night?
அந்தப் பிள்ளைகள் கடந்த இரவு அழுதுகொண்டு இருந்தனவா? (வினா)

**(தொடரும்)**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

அற்லஸ்




அற்லஸ் வழியே உலகைக் காண்போம்...

இங்கு வழங்கப்பட்டுள்ள உலக நடப்புக்கள் தொடர்பான தகவல்களிலிருந்து கேட்கப்படும் கேள்விக்கு சரியான விடை அளிப்போரில் மூவருக்குத் தலா ரூ.150/= பெறுமதியான 'அற்லஸ்' பாடசாலை உபகரணங்களை வாங்கக் கூடிய பண வவுச்சர்களைப் பரிசாக சிலோன் பென்சில் நிறுவனம் (அற்லஸ்) வழங்கும்.

# இந்தியாவிலும் தொற்றுக் காய்ச்சல் சந்தேகம்!




வெளிநாட்டுப் பயணமொன்றை மேற்கொண்டுவிட்டு இந்தியாவிற்கு வந்திருந்த பயணிகள் இரண்டு பேரை மருத்துவப் பரிசோதனைகளுக்கு உட்படுத்தியபோது அவர்களுக்கு 'இன்ஃப்ளுவென்ஸா ஏ' என்ற தொற்றுக்காய்ச்சல் ஏற்பட்டிருப்பதாக சந்தேகம் ஏற்பட்டுள்ளது. இதன் காரணமாக மேற்படி இரண்டு நபர்களும் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இதுகுறித்து கருத்துத் தெரிவித்துள்ள மருத்துவர்கள், ''இந்த இரண்டு நபர்களையும் தீவிர மருத்துவக் கண்காணிப்பில் வைத்திருப்பதாகவும் அனைத்து மருத்துவப் பரிசோதனைகளுக்கும் அவர்களை உட்படுத்தியுள்ளதாகவும்'' குறிப்பிட்டனர்.

இந்த இரண்டு நபர்களில் ஒருவர் லண்டன் நகரிலிருந்தும் மற்றவர் அமெரிக்காவிலிருந்தும் இந்தியாவிற்கு வந்தவர்களாவர்.

இவர்களுக்கு ஏற்பட்டுள்ள காய்ச்சல் 'இன்ஃப்ளுவென்ஸா ஏ' என்பது உறுதியானால் 1.1 பில்லியனுக்கும் அதிகமான மக்களைக் கொண்ட இந்தியாவிற்கு அது மிகப்பெரிய அச்சுறுத்தலாக இருக்கும் என்று கருதப்படுகின்றது.







மெக்ஸிக்கோவில் கண்டுபிடிக்கப்பட்டு ஆரம்பத்தில் 'பன்றிக்காய்ச்சல்' என்று பெயரிடப்பட்டு பின்னர் 'இன்ஃப்ளுவென்ஸா ஏ' என்று பெயர் மாற்றப்பட்ட மேற்படி தொற்றுக்காய்ச்சல், 18 இற்கும் மேற்பட்ட நாடுகளில் பரவியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# பனாமா ஜனாதிபதி தேர்தலில் தொழிலதிபர் பெருவெற்றி



பனாமா நாட்டில் இடம்பெற்ற ஜனாதிபதி தேர்தலில் பிரபல தொழிலதிபரான ரிகார்டோ மார்னெல்லி என்பவர் வெற்றி பெற்றுள்ளார்.

பனாமாவிலுள்ள பாரிய சந்தைத் தொகுதியொன்றின் உரிமையாளராக உள்ள ரிகார்டோவிற்கு வயது 57.

இத்தேர்தலில் இவரை எதிர்த்துப் போட்டியிட்ட முன்னாள் ஜனாதிபதி கில்லெமோவிற்கு மூன்றாவது இடமே கிடைத்துள்ளது. அதேவேளை, ஆளும் கட்சியின் சார்பாகப் போட்டியிட்ட ஹெரேரா இரண்டாம் இடத்தைப் பெற்றுள்ளார்.

வெற்றி பெற்றுள்ள ரிகார்டோ 2014 ஆம் ஆண்டு வரை ஜனாதிபதியாகப் பதவி வகிப்பார். பனாமா கால்வாயை விரிவுபடுத்துவதே இவரது முக்கிய இலக்காக இருந்து வருவதாகவும் கருதப்படுகின்றது.

# அமெரிக்க ஜனாதிபதி முத்தரப்பு பேச்சுவார்த்தை

ஆப்கானிஸ்தான், பாகிஸ்தான் நாடுகளில் அமெரிக்காவின் புதிய கொள்கைகளை அறிமுகப்படுத்துவது தொடர்பாக அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா பாகிஸ்தான் ஜனாதிபதி அஷிப் அல்-சர்தானி மற்றும் ஆப்கான் ஜனாதிபதி ஹமித் கர்சாய் ஆகியோருடன் கலந்தாலோசனைகளை நடத்தியுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.







வெள்ளை மாளிகையில் நடைபெற்ற இப்பேச்சுவார்த்தைகளின்போது குறித்த இரண்டு நாடுகளினது தலைவர்களையும் தனித்தனியே சந்தித்து ஜனாதிபதி ஒபாமா கலந்துரையாடியுள்ளார்.

அமெரிக்க-ஆப்கானிஸ்தான் நாடுகளுக்கிடையிலான தொடர்புகள், கொள்கையில் மேற்கொள்ள வேண்டிய மாற்றங்கள், தீவிரவாதப் பிரச்சினைகள் குறித்து இந்தப் பேச்சுவார்த்தைகளின்போது விரிவாக ஆராயப்பட்டதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

**அற்லஸ் கேள்வி - 203**

**கேள்வி:** பனாமாவின் புதிய ஜனாதிபதி எத்தனையாம் ஆண்டு வரை பதவியில் இருப்பார்?

சரியான விடை......................................

உங்கள் விடையுடன்- பெயர், முகவரி, வகுப்பு, பாடசாலை முகவரி, வீட்டு முகவரி, அருகிலுள்ள நகரம், மாவட்டம் முதலிய விபரங்களைத் தபாலட்டையில் மாத்திரம் எழுதி அனுப்ப மறவாதீர்கள்.

அனுப்ப வேண்டிய முகவரி:

அற்லஸ் வழியே
உலகைக் காண்போம், கேள்வி - 203,
விஜய், த.பெ.எண் 2037, கொழும்பு.

**போட்டி இல - 201 இன் சரியான விடை: 545 ஆசனங்கள்**

**பரிசு பெறுவோர்**

தேவலிங்கம் நிலுக்ஷனா,
பாடசாலை வீதி, சேனைக் குடியிருப்பு-1, கல்முனை.

எல்.ஹமீதா பானு,
33/A, முஸ்லிம் பள்ளி ஒழுங்கை,
நாவல வீதி, ராஜகிரிய.

எஃப்.ஆதிலா,
179, நியூ எல்பிட்டிய, கெலிஓய.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சுத்தப்படுத்திய பின் செம்பு

# செந்நிறத்தில் ஜொலிக்கும் 'செம்பு'

'செம்பு' எனும் உலோகத்தை தமிழில் 'தாமிரம்' என்றும் அழைப்பர். உலகில் இலகுவாகப் பாவிக்கக்கூடிய உலோகங்களில் ஐரோப்பாவில் கொடி கட்டிப் பறந்த கிரேக்க மற்றும் ரோம நாகரிகங்களில் மிக முக்கியமானதும் பெறுமதி வாய்ந்ததுமான உலோகமாக செம்பு திகழ்ந்துள்ளது.


கண்டுபிடிக்கப்பட்டதாகக் கருதப்படுகிறது. எனினும், தங்கம் கண்டுபிடிக்கப்படும் வரை அதிக விலை நிர்ணயிக்கப்பட்ட

செம்பும் ஒன்று. செம்பு மற்றும் தகரம் ஆகிய இரு உலோகங்களையும் கலந்தே 'வெண்கலம்' தயாரிக்கப்படுகின்றது.

எகிப்திய நாகரிகத்தில்கூட செம்பு பாவனையில் இருந்துள்ளது. நைல்நதிக் கரையோரங்களில் வாழ்ந்த மக்கள் பல்வேறு தேவைகளுக்காக செம்பினைப் பயன்படுத்தியுள்ளனர். புராதன சீனாவில்கூட செம்பு அதிகளவில் பயன்படுத்தப்பட்டுள்ளது. அத்துடன்,

செம்பு ஏனைய உலோகங்களை விட இலகுவாகப் பெறக்கூடியதாகவும் இலகுவாகக் கையாளக்கூடியதாகவும் இருந்ததால் ஆயுதங்கள், பாத்திரங்கள் போன்ற மனித பாவனைகளுக்குப் பயன்படக்கூடிய பல முக்கிய பொருட்களின் தயாரிப்பில் அதிகம் பயன்பட்டுள்ளது.

கி.மு 4000 ஆம் ஆண்டளவிலேயே தங்கம்



செம்பு அகழ்வு சுரங்கம்



சுத்தப்படுத்தப்படுவதற்கு முன் செம்பு

உலோகமாக செம்பே திகழ்ந்துள்ளது.

## பொருளாதார பங்களிப்பு

செம்பின் அதிகரித்த தேவை கருதி அது பெருமளவில் உற்பத்தி செய்யப்படுகிறது. தென் அமெரிக்காவின் 'சிலி' நாடு செம்புப் படிவங்களால் செழுமை நிறைந்த நாடாகக் கருதப்படுகின்றது. சிலி நாட்டின் வடகிழக்கு பிரதேசத்தில் அமைந்துள்ள 'எஸ்கொண்டா' சுரங்கமானது, உலகிலேயே மிகப்பெரிய செப்புச் (செம்பு) சுரங்கமாகும். அது 16,000 அடி நிலப்பிரதேசத்தில் பரந்து காணப்படுகின்றது.



செம்பினாலான பாத்திரங்கள்

## உயிரினங்களின் இருப்பிற்கு அவசியம்

உலகிலுள்ள உயிரினங்களின் இருப்பிற்கும் சிறந்த தாவர வளர்ச்சிக்கும் புவியில் காணப்படும் செம்புப் படிவங்கள் அத்தியாவசியமாகின்றன. மேலும், நமது உடலில் பல்வேறு நொதியங்களின் சுரப்புக்கும் செம்பு தேவைப்படுகின்றது.

## குறியீடு

'Cu' என்பது செம்பின் ரசாயனக் குறியீடாகும். இக்குறியீடானது லத்தீன் மொழியில் இருந்தே பாவனைக்கு வந்துள்ளது. லத்தீன் மொழியில் செம்பு 'கியூப்ரம்' (Cuprum) என்றே அழைக்கப்படுகின்றது. அந்தப் பதத்தை அடிப்படையாக வைத்தே 'Cu' என்ற குறியீடு உருவானது. இது செந்நிறத்திலான ஓர் உலோகம் என்பதோடு, மிகச் சிறந்த வெப்பம் மற்றும் மின் கடத்தியுமாகும்.



செம்பு அதிகளவுள்ள உணவு வகைகள்

## இலங்கையில் செம்பு

ருவன்வெலிசாய தாதுகோபுரத்தைக் கட்டும் பொழுது அநுராதபுரத்திற்கு அண்மித்த கிராமமொன்றில் செம்புப் படிவங்கள் கண்டுபிடிக்கப்பட்டன. இவ்வாறு செம்புப் படிவங்கள் கண்டுபிடிக்கப்பட்டதை அடுத்தே, அந்த ஊருக்கு 'செம்பு பிறந்த ஊர்' என்ற அர்த்தத்தில் 'தம்புத்தேகம' என்று பெயர் வந்ததாக வாய் மொழிக்கதைகள் கூறுகின்றன. -ஜெ

# விஜய் மாணவர் கழகம்



அங்.இல : 2669

த.சுவேதிகா, தரம் - 11, யா/ஆ.ம.வித்., ஆழியவளை.



அங்.இல : 2670

எச்.அர்ஷட், தரம் - 11, ப/தமிழ் ம.கல்., பண்டாரவளை.



அங்.இல : 2671

சி.சிவகாந்தன், உயர் தரம், உருத்திரபுரம் ம.வித்., கிளிநொச்சி.



அங்.இல : 2672

க.அனுஜன், உயர் தரம், செ.ஜோன்ஸ் கல்., யாழ்ப்பாணம்.



அங்.இல : 2673

எஸ்.நளிஸ், உயர் தரம், கெ.மு.வித்., கெக்கிராவை.



அங்.இல : 2674

எம்.இஹ்சான், தரம் - 11, கம்பிரிகஸ்வெவ உழும் ம.வித்., அநுராதபுரம்.



அங்.இல : 2675

ஜே.ஜே.சார்ள்ஸ், தரம் - 4, மகா ஊவா த.வித்., வலப்பனை.



அங்.இல : 2676

ரப்அத் ஆரா, தரம் - 4, ஸெய்னப் பெ.ஆ.பாட., புத்தளம்.



அங்.இல : 2677

எம்.ராஸிப், தரம் - 7^, அறபா தே.பாட., மாத்தறை.



அங்.இல : 2678

எஃப்.ஆயிஷா, தரம் - 2, மடிகே மு.வித்., முதுந்துவ.



அங்.இல : 2679

உ.நவநீதன், தரம் - 11, விபுலானந்தா கல்., வவுனியா.



அங்.இல : 2680

இ.ஹேசிகா, தரம் - 3, உதயபுரம் த.வித்., கல்லாறு.



அங்.இல : 2681

எம்.மல்கான், தரம் - 2, தே.பாட., ஓட்டமாவடி-02.



அங்.இல : 2682

சோ.டிலக்ஷனா, தரம் - 7, கி.ம.வித்., கிளிநொச்சி.



அங்.இல : 2683

எஃப்.நப்ராஸ், தரம் - 7^, ஸாஹிரா தே.பாட., அகுறனை.



அங்.இல : 2684

எம்.உவைஸ், தரம் - 12^B, மின்ஹாத் தே.பாட., மாத்தறை.



அங்.இல : 2685

எஸ்.நிர்மலா, தரம் - 11, கலைமகள் த.வித்., அலவத்துகொடை.



அங்.இல : 2686

ஜே.திலுக்ஷன், தரம் - 3, சரஸ்வதி த.வித்., பதுளை.



அங்.இல : 2687

ஏ.வாசில், தரம் - 11, தி/மத்திய கல்., கிண்ணியா.



அங்.இல : 2688

சா.சனுபறா, தரம் - 11, சைவப்பிரகாச ம.கல்., வவுனியா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாடைக்காற்று தந்த பரிசு



முன்னொரு காலத்தில் இரண்டு சகோதரர்கள் வாழ்ந்து வந்தார்கள். இருவரும் பணக்கார இவான், ஏழை இவான் என்று அழைக்கப்பட்டனர்.

பணக்கார இவானுடைய சூட்டடுப்பில் ரொட்டியும் மேசையில் இறைச்சியும் வீட்டில் தட்டுமுட்டுச் சாமான்களும் தொழுவத்தில் நிறையக் கால்நடைகளும் சரக்கறையில் நிறையக் கோதுமையும் அணிய நல்ல உடைகளும் சாப்பிட நல்ல உணவுகளும் இருந்தன. அவனது ஆடுகள் கொழுத்து இருந்தன. அவனது பசுக்களும் அவ்வாறே இருந்தன, புல்வெளியில் அவை மேய்ந்து திரிந்தன. சுருக்கமாகச் சொன்னால், அவனிடத்தில் எல்லாமே இருந்தன. அவனும் அவனது மனைவியுமே அவனது குடும்பம்,

**காற்று சாலை நெடுகிலும் வேகமாய் அடித்துக் கொண்டு சென்றது, ஏழை இவான் அதைத் துரத்திக்கொண்டு ஓடினான். காற்று காட்டுக்குள்ளாக விரைந்தது. ஏழை இவான் அதைத் தொடர்ந்து சென்றான்**

பணக்கார இவானுக்குக் குழந்தைகள் இல்லை.

ஏழை இவானுக்கு ஏழு குழந்தைகள் இருந்தனர், அவனின் வீட்டு அடுப்பருகே பூனை படுத்து உறங்கியபடியே இருக்கும். அத்துடன், அவனுக்கென்று சொந்தமாக எதுவுமில்லை. அவனுடைய ஏழு குழந்தைகளும் கோதுமைக் கூழையும் முட்டைக்கோசு சூப்பையும் கேட்டு மன்றாடிக் கொண்டிருப்பார்கள். அவர்களுக்கு உண்ணக்கொடுக்க ரொட்டித் துண்டோ, இறைச்சித் துண்டோ எதுவுமே ஏழை இவானிடம் இருக்கவில்லை. ஒன்றும் செய்ய முடியாமல் போகவே, ஏழை இவான் தன் பணக்காரச் சகோதரனிடம் கொஞ்சம் உணவு கேட்கச் சென்றான்.

''வணக்கம், சகோதரா''

''வணக்கம், ஏழை இவான்! என்ன காரியமாக இங்கே வந்திருக்கிறாய்?''

''எனக்குக் கொஞ்சம் மா கடன் கொடு. உனக்கு அதைத் திருப்பித் தருவேன்''

''நல்லது. இதோ உனக்குத் தட்டு நிறைய மா இருக்கிறது. நீ எனக்கு சாக்கு நிறையத் திருப்பித் தரவேண்டும்'' என்றான் பணக்கார இவான்.

''ஒரு தட்டுக்கு ஒரு சாக்கு நிறையவா! என்ன சொல்கிறாய், சகோதரா? அது மிக அதிகம் என்று நீ எண்ணவில்லையா?''

''சரி, அப்படி நினைத்தால் என்னைக் கேட்காதே, வேறு யாரிடமாவது போய் பிச்சை கேள்''

செய்வதற்கு எதுவும் இல்லை. கண்ணீர் சிந்தி நின்ற ஏழை இவான் ஒரு தட்டு மாவை எடுத்துக்கொண்டு தன் வீடு நோக்கிச் சென்றான். ஆனால், தனது வீட்டின் வாயிலை அடைந்திருந்த அந்த நேரத்தில் பலமான காற்று வீசத் தொடங்கி ஏழை இவானுக்கு மேலாகச் சுழன்றடித்தது, தட்டிலிருந்த மா அனைத்தையும் அக்காற்று அடித்துக்கொண்டு போய்விட்டது. தட்டில் எஞ்சியதெல்லாம் சிறிதளவு மாதான்.

இதனால், ஏழை இவான் மிகவும் கோபமுற்றான், ''ஓ, மட்டமான வாடைக் காற்றே! என் அப்பாவிக் குழந்தைகளுக்கு மோசம் செய்துவிட்டாய், அவர்களைப் பட்டினி போட்டுவிட்டாய். சற்றுப் பொறு, உன்னைக் கண்டுபிடித்து உனது குறும்புத்தனத்துக்குச் சரியாக பதில் கொடுப்பேன்'' என்று கூறியபடியே ஏழை இவான் வாடைக்காற்றைப் பிடிக்கப் புறப்பட்டுச் சென்றான். காற்று சாலை நெடுகிலும் வேகமாய் அடித்துக்கொண்டு சென்றது, ஏழை இவான் அதைத் துரத்திக்கொண்டு ஓடினான். காற்று காட்டுக்குள்ளாக விரைந்தது. ஏழை இவான் அதைத் தொடர்ந்து சென்றான். ஒரு பெரிய 'ஓக்' மரத்திற்கு அருகே வந்தான். உடனேயே




அக்காற்று மரத்தின் பொந்துக்குள்ளாக நுழைய, இவானும் அதனுடன் உள்ளே நுழைந்து கொண்டான்.

தனக்கு அருகில் ஏழை இவான் இருப்பதைப் பார்த்ததும் காற்று அவனிடம் கேட்டது; ''நல்லவனே, எதற்காக என்னைப் பின்தொடர்ந்து வருகிறாய், அதை நீ என்னிடம் சொல்வாய்'' என்றது.

''பசியுடன் இருந்த எனது குழந்தைகளுக்குக் கொஞ்சம் மா வாங்கிக்கொண்டு வந்து கொண்டிருந்தேன். குறுப்புக்காரனாகிய நீ என் மீது வீசி, சீட்டியடித்து எல்லாவற்றையும் தூற்றிவிட்டாய். வெறுங்கையுடன் எப்படி என்னால் வீட்டுக்குச் செல்லமுடியும்?'' என்று ஏழை இவான் பதிலளித்தான்.

''ஓ, அவ்வளவுதானா! சரி, இதற்கு நிலைகுலைந்து போகவேண்டிய தேவை இல்லை. இதோ, உனக்காக மந்திர மேசை விரிப்பு. நீ கேட்பதை எல்லாம் அது உனக்குத் தரும். இதை உனக்குத் தருகிறேன்'' என்றது காற்று.

ஏழை இவான் இதனால், பெருமகிழ்ச்சியுற்றான். காற்றுக்குத் தலை வணங்கிவிட்டு வீட்டுக்கு ஓடினான். வீட்டை அடைந்த உடனேயே மேசை மீது விரிப்பை விரித்து விட்டுச் சொன்னான், ''விரிப்பே, விரிப்பே, மந்திர விரிப்பே, நாங்கள் உண்ணவும் பருகவும் ஏதாவது கொடு''

அவன் இதைச் சொன்னானோ இல்லையோ, மேசை விரிப்பின் மீது முட்டைக்கோசு சூப்பும், காளான் பணியாரமும் இறைச்சிக்கறியும் தோன்றின. ஏழை இவானும் அவனது குழந்தைகளும் வயிறு நிறைய உண்டுவிட்டுப் படுக்கைக்குச் சென்றனர்.

காலையில் சிற்றுண்டிக்காக அவர்கள் உட்கார்ந்திருந்த நேரத்தில் குடிசைக்குள்ளாகப் பணக்கார இவான் வந்தான். மேசை நிறைய உணவுகள் இருப்பதைப் பார்த்ததும் பணக்கார இவானின் முகம் கோபத்தால் சிவந்தது.

(தொடரும்...)

# தந்திரம் பலிக்கவில்லை

ஓநாய் ஒன்று ஆற்றின் கரையிலுள்ள ஒரு குகையில் வசித்து வந்தது. ஒரு நாள் இமயமலையில் பனி உருகி வெள்ளம் பெருக்கெடுத்தது. இதனால். ஓநாய் வசித்த குகையை சுற்றி நீர்மட்டம் உயர்ந்தது. நாலாபக்கமும் தண்ணீர் சூழ்ந்து கொண்டதால் அன்று ஓநாயினால் இரை தேடி வெளியே செல்ல முடியவில்லை. எவ்வளவுதான் முயன்றாலும் இன்று இரை எதுவும் கிடைக்கப் போவதில்லை என்று அறிந்து கொண்ட ஓநாய்.

இன்று நான் விரதம் இருக்கப் போகிறேன். எதுவும் சாப்பிடப் போவதில்லை என்று உரக்கச் சொல்லிக் கொண்டது.

மிகுந்த பக்திப் பரவசத்துடன் முகத்தை வைத்துக் கொண்டு ஒரு பாறையின் மீது அமர்ந்தது. சிறிது நேரம் சென்றது. ஓநாயால் அப்படியே உட்கார்ந்து இருக்க முடியவில்லை. அதன் மனம் எல்லாம் எதை எதையோ நினைத்துக் கொண்டிருந்தது. அப்போது சற்றும் எதிர்பாராதவிதமாக ஒரு காட்டு ஆடு பாறைக்குப் பாறை தாவி ஆற்றைக் கடந்து ஓநாய் உட்கார்ந்திருந்த பாறையை அடைந்தது.



ஆட்டைப் பார்த்ததும் ஓநாய்க்கு ஆசை ஏற்பட்டு விட்டது. அடடா கடவுளே! என் விரதத்தைக் கண்டு மகிழ்ந்து ஒரு இரையை அனுப்பி இருக்கிறார். இந்த சந்தர்ப்பத்தை நழுவ விடுவதற்கு நான் என்ன முட்டாளா? என்று கூறிக் கொண்டே ஆட்டின் மீது பாய்ந்தது. ஆனால், ஆட்டின் நல்ல காலமோ என்னவோ குறி தவறி விட்டது. இதனால், ஓநாய் தன் இரையைத் தவற விட்டுவிட்டது.

மேலும், சிறிது நேரம் ஓநாய் அப்படியே பாறை மீது கண்ணை முடிக் கொண்டு ஜெபம் செய்வதைப் போலவே உட்கார்ந்திருந்தது. அதன் அதிர்ஷ்டம் வேறு ஒரு குட்டி ஆடு அந்தப் பக்கம் வந்தது. கண்ணை மூடிக் கொண்டிருந்த ஓநாயைப் பார்த்து அதற்குப் பயம் ஏற்படவில்லை. எனவே, அந்த ஆட்டுக் குட்டி ஒரு தாவலில் துள்ளி வந்து ஓநாயின் அருகில் வந்து நின்றது. அவ்வளவுதான், ஏற்கனவே ஒரு முறை தனது இரையைத் தவறவிட்ட ஓநாய் இந்த முறை சற்று எச்சரிக்கையோடு ஆட்டுக் குட்டியின் மீது பாய்ந்தது. இருந்தாலும் இந்தத் தடவையும் குறி தவறிப் போய் விட்டது. ஆட்டுக் குட்டியும் தப்பினோம் பிழைத்தோம் என்று ஆற்றைக் கடந்து ஓநாய்க்கு எட்டாத தொலைவுக்கு ஓடியே போய்விட்டது.

சீச்சீ... விரத நாளில் ஆட்டு மாமிசம் சாப்பிடும் அளவிற்கு நான் கேவலமாகப் போய் விட்டேனா என்ன? ஏதோ ஆசையினால் சற்றுக் குழம்பி விட்டேன். இந்த நாள் விரத நாள் தான் என்று சொல்லிக் கொண்டு. பாறையின் மீது உட்கார்ந்து கண்ணை மூடிக் கொண்டது.

இப்படிப்பட்ட நடிப்புப் பேர்வழிகள் இந்த உலகத்தில் நிறையப் பேர் உள்ளனர். நாம்தான் கவனமாக இருக்கவேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அனுசரணையாளர் இல்லாமல் சிரமத்தில் சிந்தன



கஸகஸ்தானில் நடைபெறவுள்ள ஆசிய பளு தூக்கும் போட்டியில் இலங்கை சார்பாக போட்டியிடவுள்ள பளுதூக்கும் வீரர் சிந்தன விதானகே தமக்கு ஆதரவு தரும் அனுசரணையாளர்கள் எவரும் இன்றி அசௌகரியங்களுக்கு ஆளாகியிருப்பதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

2006 ஆம் ஆண்டில் பொதுநலவாய நாடுகளின் விளையாட்டுப் போட்டிகளின் போது பளுதூக்கும் போட்டியில் தங்கத்தை வெற்றியீட்டியதையடுத்து கடந்த சில வருடங்களாக சிந்தனவுக்கு 'பிரென்டெக்ஸ்' என்ற நிறுவனமே அனுசரணை வழங்கி வந்தது.

எனினும், மேற்படி நிறுவனம் தற்போது தனது அனுசரணையை விலக்கிக் கொண்டுள்ளதால், புதிய அனுசரணை யாளரைத் தேட வேண்டிய நிலைக்கு அவர் ஆளாகியிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. அவருக்கு உரிய அனுசரணையாளரை ஏற்பாடு செய்து தருவதாக விளையாட்டுத்துறை அமைச்சர் உறுதியளித்திருந்த போதிலும் மூன்று மாதங்கள் கடந்த நிலையில் அவரது எதிர்பார்ப்பு இன்னும் நிறைவேறவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

அனுசரணையாளர்கள் இல்லாத நிலையில் பளுதூக்கும் பயிற்சிகளில் ஈடுபடும்போது அவசியப்படுகின்ற தேவைகளை நிறைவேற்றுவதற்கு வழியின்றி சிரமப்படுகின்ற சிந்தன, கடந்த ஒலிம்பிக் போட்டிகளில் தூக்கிய எடையை விட கூடிய எடையை இம்முறை ஆசிய போட்டிகளில் தூக்குவதே தனது இலக்கு என்றும் குறிப்பிட்டுள்ளார்.

# ஐ.பி.எல் போட்டிகளுக்காக சிறைக்கைதிகள் உண்ணாவிரதம்



இந்திய கொல்கத்தா சிறைச்சாலையிலுள்ள கைதிகள் தமக்கு ஐ.பி.எல் போட்டிகளை தொலைக் காட்சியில் பார்ப்பதற்கான ஏற்பாடுகளை செய்து தருமாறு கோரி உண்ணாவிரதப் போராட்டமொன்றை நடத்தியுள்ளதாக ஊடகங்களில் செய்திகள் வெளிவந்துள்ளன.

பொதுவாகவே இந்தியாவில் கிரிக்கெட் போட்டிகளுக்கு அபிமானிகள் அதிகம். கடமைகளை மறந்து கிரிக்கெட் போட்டிகளை ரசிப்பதில் அலாதி விருப்புடைய ரசிகர்கள் அநேகர்.

இப்படிப்பட்ட ரசனை மிக்கவர்களில் சிலர்தான் இவ்வாறு சிறைச்சாலையில் போராட்டம் நடத்தியுள்ளனர்.

பொதுவாக இவர்களுக்கு அரச தொலைக்காட்சி சேவையை பார்ப்பதற்கு மட்டுமே அனுமதி உள்ளது. ஆனால், ஐ.பி.எல் போட்டிகள் கேபள் டி.வி ஊடாகவே இந்தியாவில் ஒளிபரப்பாகின்றது. எனவே, கேபள் தொலைக்காட்சி ஒளிபரப்புக்களைப் பார்ப்பதற்கான அனுமதி இல்லாததால் அதற்கான ஏற்பாடுகளும் செய்யப்படவில்லை.

இப்படியான நிலையிலேயே மேற்படி சிறைக்கைதிகள் தமக்கு ஐ.பி.எல் போட்டிகளைப் பார்ப்பதற்கு கேபள் டீ.வி வசதியை ஏற்படுத்தித் தருமாறு கோரி உண்ணாவிரதப் போராட்டத்தை நடத்தியுள்ளனர்.

இதுகுறித்து கருத்துத் தெரிவித்துள்ள சிறைச்சாலை அதிகாரி, "அரச தொலைக்காட்சி சேவை மட்டுமே அனுமதிக்கப்பட்டுள்ள நிலையில் கேபள் டீ.வியை பார்ப்பதற்கான வசதியை எந்த வகையிலும் செய்து கொடுக்க முடியாது" என்று தெரிவித்துள்ளார்.

## ஐ.பி.எல்; எதிர்வரும் போட்டி விபரங்கள்

தென் ஆபிரிக்காவில் ஐ.பி.எல் கிரிக்கெட் போட்டிகள் நடைபெற்று வருகின்றமை நாம் அறிந்ததே. ஏற்கனவே நடந்து முடிந்துள்ள போட்டிகளைத் தொடர்ந்து மீதமாக உள்ள போட்டிகள் நடைபெறவுள்ள கால அட்டவணை பின்வருமாறு:

| திகதி | நேரம் | மோதும் அணிகள் |
|---|---|---|
| மே 13 | 8.00 (இரவு) | டெக்கான் சார்ஜர்ஸ்/டில்லி டெயர் டெவில்ஸ் |
| மே 14 | 4.00 (மாலை) | பெங்களூர் செலன்ஜார்ஸ்/சென்னை சுப்பர் கிங்ஸ் |
| | 8.00 (இரவு) | மும்பாய் இந்தியன்ஸ்/ராஜஸ்தான் ரோயல்ஸ் |
| மே 15 | 8.00 (இரவு) | டில்லி டெயார் டெவில்ஸ்/கிங்ஸ் லெவன் பஞ்சாப் |
| மே 16 | 4.00 (மாலை) | சென்னை சுப்பர்கிங்ஸ்/மும்பாய் இந்தியன்ஸ் |
| | 8.00 (இரவு) | டெக்கன் சார்ஜர்ஸ்/கொல்கத்தா நைட் ரைடர்ஸ் |
| மே 17 | 4.00 (மாலை) | டெக்கன் சார்ஜர்ஸ்/கிங்ஸ் லெவன் பஞ்சாப் |
| | 8.00 (இரவு) | டில்லி டெயார் டெவில்ஸ்/ராஜஸ்தான் ரோயல்ஸ் |
| மே 18 | 8.00 (இரவு) | சென்னை சுப்பர் கிங்ஸ்/கொல்கத்தா நைட் ரைடர்ஸ் |
| மே 19 | 8.00 (இரவு) | பெங்களூர் செலன்ஜார்ஸ்/டில்லி டெயார் டெவில்ஸ் |
| மே 20 | 4.00 (மாலை) | கொல்கத்தா நைட் ரைடர்ஸ்/ராஜஸ்தான் ரோயல்ஸ் |
| | 8.00 (இரவு) | சென்னை சுப்பர் கிங்ஸ்/கிங்ஸ் லெவன் பஞ்சாப் |
| மே 21 | 4.00 (மாலை) | டில்லி டெயார் டெவில்ஸ்/மும்பாய் இந்தியன்ஸ் |
| | 8.00 (இரவு) | பெங்களூர் செலன்ஜார்ஸ்/டெக்கான் சார்ஜஸ் |
| மே 22 | 8.00 (இரவு) | முதலாவது அரையிறுதி ஆட்டம் |
| மே 23 | 8.00 (இரவு) | இரண்டாவது அரையிறுதி ஆட்டம் |
| மே 24 | 8.00 (இரவு) | இறுதிப்போட்டி |

# 'டுவென்டி டுவென்டி' இலங்கை அணியின் விபரம்








'டுவென்டி டுவென்டி' உலகக் கிண்ணப் போட்டிகளில் கலந்து கொள்ளவுள்ள இலங்கை அணியில் லசித் மாலிங்க சேர்க்கப்பட்டுள்ளார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. ஐ.பி.எல் போட்டிகளில் லசித் மாலிங்க சிறப்பாகப் பந்து வீசி வருவதன் காரணமாகவே இலங்கை அணியில் அவருக்கு வாய்ப்பு வழங்கப்பட்டிருப் பதாக தெரிவிக்கப்படுகின்றது.

மேலும், இந்திக்க டிசேரம், இசுறு உதான ஆகிய இருவரும் இலங்கை அணியில் சேர்க்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

'டுவென்டி டுவென்டி' போட்டி யொன்றில் அதிகூடிய ஓட்டங்களைப் பெற்று (2007 இல் கென்யாவிற்கு எதிராக 260 ஓட்டங்கள்) உலக சாதனையை ஏற்படுத்திய இலங்கை அணி இதுவரை சர்வதேச மட்டத்தில் 13 'டுவென்டி டுவென்டி' போட்டிகளில் கலந்து கொண்டு 8 போட்டிகளில் வெற்றியீட்டி யுள்ளமை குறிப்பிடத்தக்கது.

**இலங்கை அணியின் விபரம்; சங்கக்கார, முரளிதரன், ஜயசூரிய, டில்ஷான், மஹேல, சாமர சில்வா, இந்திக்க டி சேரம், ஜெஹான் முபாரக், மஹ்ரூஃப், என்ஜலோ, இசுரு உதான, லஸித் மாலிங்க, திலான் துஷார, நுவன் குலசேக்கர, அஜந்த மெண்டிஸ்.**

# 'டுவென்டி டுவென்டி' இந்திய அணியின் விபரம்



'டுவென்டி டுவென்டி' உலகக் கிண்ணப் போட்டிகள் எதிர்வரும் ஜூன் மாதம் 5 ஆம் திகதி தொடக்கம் 21 ஆம் திகதி வரை இங்கிலாந்தில் நடைபெறவுள்ளது. மேற்படி போட்டிகளில் கலந்து கொள்கின்ற 15 பேரைக் கொண்ட இந்திய அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

2007 ஆம் ஆண்டில் நடைபெற்ற போட்டியில் இடம்பெற்றிருந்த அகர்கர், உத்தப்பா, ஜொஹிந்தர் சர்மா, ஸ்ரீசாந்த்,சௌலா ஆகியோர் இம்முறை அணியில் சேர்த்துக் கொள்ளப்படவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. அணியின் விபரம் வருமாறு:

**டோனி, ஷெவாக், காம்பீர், ரெய்னா, யுவராஜ், யூசுப்பதான், ரோஹித் ஷர்மா, ஹர்பஜன் சிங், சஹீர்கான், இஷாந்த் ஷர்மா, பிரவீன் குமார், ஆர்.பி.சிங், ரவீந்திர ஜடேஜா, பிரக்யான் ஓஜா, இர்பான் பதான்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்திய அரசியல் கட்சிகள்

**இந்தியாவில் பல கட்சி ஆட்சி முறை பின்பற்றப்படுவதால் எண்ணற்ற கட்சிகள் அங்குள்ளன. இவை இந்தியாவின் தேர்தல் ஆணையகத்தால் குறிப்பிட்ட சில அடிப்படைகளுக்கு அமைய, தேசிய கட்சிகள், மாநிலக் கட்சிகள் என இரண்டு பிரிவுகளாக அங்கீகரிக்கப்பட்டுள்ளன. அந்த வகையில், உலகில் அதிக அரசியல் கட்சிகளைக் கொண்ட நாடாக இந்தியா காணப்படுகின்றது.**






## தேசிய கொங்கிரஸ் கட்சி

இந்திய அரசியல் கட்சிகளில் இந்திய தேசிய கொங்கிரஸே மிகவும் பழமையான அரசியல் கட்சி ஆகும். இந்தியாவில் பிரித்தானிய ஆட்சிக்காலத்தில் இந்தியா சுதந்திரம் பெறவேண்டி உருவாக் கப்பட்ட தேசிய இயக்கமே இந்திய தேசிய கொங்கிரஸாகும். பின்னர் இது அரசியல் கட்சியாக வளர்ச்சி அடைந்தது.


இந்தியாவின் சுதந்திரத்திற்காகப் பாடுபட்ட கட்சி என்ற ரீதியில் சுதந்திர இந்தியாவின் முதல் தேர்தலில் அமோக வெற்றி பெற்றது. அதனைத் தொடர்ந்து நடைபெற்ற நாடாளுமன்ற பொதுத்தேர்தல்களிலும் மாநிலங்களுக்கான சட்டசபைத் தேர்தல்களிலும் இந்திய தேசிய கொங்கிரஸ் கட்சியே வெற்றி பெற்றது. எனினும், காலம் செல்லச் செல்ல கொங்கிரஸ் கட்சியின் தனித்துவமான செல்வாக்கு சரியத் தொடங்கியது.


தேசிய கொங்கிரஸ் கட்சி


பாரதீய ஜனதாக் கட்சி


ஜனதா தளம்


பாட்டாளி மக்கள் கட்சி


அ.தி.மு.க

## மாநிலக் கட்சிகள்

1960 ஆம் ஆண்டின் பின்னர் இந்தியாவின் பல்வேறு மாநிலங்களில் பிராந்தியக் கட்சிகள் செல்வாக்கைப் பெற ஆரம்பித்தன. இதன் அடிப்படையில், 1967 இல் தமிழ்நாட்டு மாநில சட்டசபைத் தேர்தலில் முதன்முதலாக தேசிய கொங்கிரஸ் கட்சி தோல்வி அடைந்து, திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சியைக் கைப்பற்றியது. அன்று முதல் இன்றுவரை கொங்கிரஸ் கட்சியால் தமிழக ஆட்சியைக் கைப்பற்ற முடியவில்லை.

நாளடைவில் பல்வேறு மாநிலங்களில் பல மாநிலக் கட்சிகள் உதயமாகின. இவற்றில் அகாலி தளம், தெலுங்கு தேசம், ஜார்க்கன்ட் முக்திமோர்ச்சா, பிஜூ ஜனதா தளம், சிரோன்மணி அகாலிதளம், தெலுங்கானா ராஷ்டிர சமிதி, அ.தி.மு.க, ம.தி.மு.க, பாட்டாளி மக்கள் கட்சி, ஆர்.எஸ்.பி, அசாம் கன பரிஷத் என்பன குறிப்பிடத்தக்கவை.







## ஜனதாக் கட்சி

இந்திரா காந்தியின் ஆட்சிக்காலத்தில் நடைபெற்ற சில ஜனநாயக விரோத செயற்பாடுகளை அடுத்து, 1977 இல் நடைபெற்ற 'லோக் சபை' தேர்தலில் இந்திய தேசிய கொங்கிரஸ் அகில இந்திய ரீதியில் தோல்வி அடைந்தது. இத்தேர்தலில் பல எதிர்க்கட்சிகளின் கூட்டணியைக் கொண்ட ஜனதாக் கட்சி (இன்றைய பாரதீய ஜனதாக் கட்சி அல்ல) அமோகமான வெற்றியைப் பெற்றது. எனினும், 1980 இல் குறுகிய காலத்தில் நடைபெற்ற 'லோக் சபை' தேர்தலில் மீண்டும் கொங்கிரஸ் வெற்றி பெற்றதோடு, ஜனதாக் கட்சி தோல்வி அடைந்தது.

## ஜனதா தளம்

1980-1989 இன் ஆரம்பம் வரை இந்திய தேசிய கொங்கிரஸ் தொடர்ந்து ஆட்சியிலிருந்தாலும் 1989 இல் அக்கட்சி மீண்டும் தோல்வி அடைந்து, வி.பி.சிங் தலைமையிலான ஜனதா தளம் ஆட்சி அமைத்தது. ஆனால், இவ் ஆட்சி இரண்டரை ஆண்டுகளே நீடித்ததோடு, 1991 இல் மீண்டும் இந்திய தேசிய கொங்கிரஸ் கட்சியின் ஆட்சி ஆரம்பமானது.




## பாரதீய ஜனதாக் கட்சி

இதற்கிடையில் இந்தியாவின் பல மாநிலங்களிலும் இந்திய தேசிய கொங்கிரஸ் கட்சிக்கு சமமாக, பலம் வாய்ந்த கட்சியாக 1990 களின் ஆரம்பத்திலிருந்து பாரதீய ஜனதாக் கட்சி எழுச்சி பெறத் தொடங்கியது. இன்று வரையும் பாரதீய ஜனதாக் கட்சி, கொங்கிரஸ் கட்சிக்குப் பெரும் சவாலாகவே அமைந்துள்ளது. 1996 இல் சில நாட்களும் 1998 இல் ஒரு சில மாதங்களும் 1999 ஆம் ஆண்டில் இருந்து 2004 வரை ஐந்து வருடங்களாக அடால் பிகாரி வாஜ்பாய் தலைமையில் பாரதீய ஜனதாக் கட்சி இந்தியாவை ஆட்சி செய்தது.

## கொம்யூனிஸ்ட் கட்சிகள்

சுதந்திர இந்தியாவில் இரண்டு கொம்யூனிஸ்ட் கட்சிகள் மிகவும் செல்வாக்குப் பெற்று விளங்குகின்றன. அவற்றில் ஒன்று; இந்திய கொம்யூனிஸ்ட் கட்சி. மற்றையது மார்க்ஸிய கொம்யூனிஸ்ட் கட்சி ஆகும். ஒப்பீட்டளவில் இவை இரண்டிலும் மார்க்ஸிய கொம்யூனிஸ்ட் கட்சியே அதிக செல்வாக்குடைய கட்சியாகும். மேற்கு வங்காளம், கேரளம், திரிபுரா ஆகிய மாநிலங்களில் கொம்யூனிஸ்ட் கட்சிகளுக்கு அதிக செல்வாக்கு உள்ளது. மேற்கு வங்காளத்தில் தொடர்ந்து 5 தடவைகள் கொம்யூனிஸ்ட்டுகள் மாநில ஆட்சியை அமைத்தனர். கேரளாவிலும் திரிபுராவிலும் பல தடவைகள் கொம்யூனிஸ்ட்டுகளின் கையில் மாநில ஆட்சி இருந்தது.

## ஏனைய தேசிய கட்சிகள்


மேற்குறித்த கட்சிகளைத் தவிர சமாஜ்வாடிக் கட்சி, ராஷ்ட்ரீய ஜனதா தளம், பகுஜன் சமாஜக் கட்சி, ஜனதா தளம் (யுனைடட்), லோக் ஜனசக்தி கட்சி, அகில இந்திய போர்வாட் கட்சி, ஜனதா தளம், ராஷ்ட்ரீய லோக்தளம் போன்ற கட்சிகளும் ஒன்றுக்கு மேற்பட்ட பல மாநிலங்களில் கணிசமான செல்வாக்கைப் பெற்றுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அற்லஸ் அறிவுக்கு விருந்து - 205 - பரிசுபெறும் அதிர்ஷ்டசாலிகள்...

| போட்டி: 01 | போட்டி: 02 | போட்டி: 03 | போட்டி: 04 | போட்டி: 05 (குறு.போ-216) |
|---|---|---|---|---|
| டி.லக்சிகன், தரம் - 2, தெல்பத்த இல.1 த.வித்., பதுளை. | ஏ.எம்.எஃப்.ஷப்னா, தரம் - $4^{E}$, முஸ்லிம் மகளிர் கல்., கொழும்பு-04. | எஸ்.தனுஷன், தரம் - $7^{B}$, ப/அப்புத்தளை த.ம.கல்.,அப்புத்தளை. | எம்.எம்.எம்.அக்ரம், தரம் - $10^{C}$, பு/ஸாஹிரா தே.பாட., புத்தளம். | எஃப்.இல்மா மபாஹிர், தரம் - $8^{G}$, ஸாஹிரா கல்., தர்கா நகர். |

## வழி காட்டுங்கள் 2






தயாரிப்பு - நுஸ்பா கௌஸ்

1, 2, 3, 4, 5 என இலக்கமிடப்பட்டுள்ள பகுதிகளுக்கான விடைகளை தபால் அட்டையில் மாத்திரம் ஒட்டி 2009.05.20 ஆம் திகதிக்கு முன்னர் எமக்குக் கிடைக்கக்கூடியவாறு அனுப்பி வையுங்கள்.

**அற்லஸ் அறிவுக்கு விருந்து 208**
**விஜய் - த.பெ.எண் 2037, கொழும்பு**

## கணக்குப் புதிர் 4

+, -, = ஆகிய கணிதக் குறியீடுகளையும் 1, 2, 3 ஆகிய எண்களையும் பொருத்தமான இடத்தில் எழுதி, இடைவெளிகளை நிரப்புங்கள்.

| | | | | |
|---|---|---|---|---|
| 5 | | | | 8 |
| | ■ | | ■ | |
| | | | | 3 |
| | ■ | | ■ | |
| 6 | | 1 | | 5 |

## உங்களுக்குத் தெரியுமா? 3


எகிப்து நாட்டிலிருந்து பாயும் ஒரு பிரதான நதிக்குக் குறுக்கே அணை ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. எகிப்தின் பிரதான நகரொன்றிலேயே இந்த அணை அமைக்கப்பட்டுள்ளதோடு, இதன் புதிய அணை 'மேல் அணை' எனவும் பழையது கீழ் அணை எனவும் அழைக்கப்படுகின்றன. எகிப்தின் பிரதான நதியாகவும் ஆபிரிக்காவின் பிரதான நதியாகவும் திகழும் இந்த நதியின் நீர், பெருக்கெடுத்தோடும் காலங்களில் அதனை அண்டியுள்ள பிரதேசங்கள் வெள்ள அனர்த்தத்துக்கு முகம் கொடுக்கின்றன. இந்நிலைமையைத் தடுப்பதற்கும் மின் உற்பத்தி, விவசாய நடவடிக்கைகளுக்குத் தேவையான நீரைப் பெற்றுக்கொள்வதற்குமென்றே இந்த நதிக்குக் குறுக்கே மேற்படி அணை அமைக்கப்பட்டு, நீர் தேக்கப்படுகின்றது.

* அந்த அணை எப்பெயர் கொண்டு அழைக்கப்படுகின்றது?

..........................................

* அது எந்த நதிக்குக் குறுக்கே அமைக்கப்பட்டுள்ளது?

..........................................



## ஆறு வித்தியாசங்களில் X அடையாளமிடுக 1



## அறிவுக்கு விருந்து - 205 விடைகள்

| போட்டி: 03 | போட்டி: 04 |
|---|---|
| (A) 2 (அ, இ, உ, ஈ, ஆ) | 1-3 |
| (B) 1 (இ, உ, ஈ, ஆ, அ) | 2-2 |
| | 3-4 |
| | 4-1 |

## போட்டிகளில் பங்குபற்றுவோருக்கு ஓர் அன்பான வேண்டுகோள்!

நீங்கள் அறிவுக்கு விருந்து போட்டிகளில் கலந்து கொண்டு பரிசு பெறும் அதிர்ஷ்டசாலிகளாக விரும்புகிறீர்களா? அப்படியாயின், போட்டிகளுக்கான விடைகளை எழுதி அனுப்பும்போது **உங்கள் பெயர், வீட்டு முகவரி, கற்கும் பாடசாலை, தரம், பாடசாலை முகவரி, அருகிலுள்ள நகரம், மாவட்டம்** என்பனவற்றை தெளிவாக எழுதி, விடைகளை **தபாலட்டையில்** மாத்திரம் இணைத்து எமக்கு அனுப்பி வையுங்கள். அத்துடன், மேற்குறிப்பிட்ட விபரங்களை எழுதி அனுப்புபவர்கள் மாத்திரமே பரிசுக் குலுக்களில் இணைத்துக் கொள்ளப்படுவதோடு, உங்களுக்குரிய பரிசுகளை காலதாமதமின்றி உரிய முறையில் அனுப்பி வைக்க இது வசதியாக இருக்கும் என்பதையும் கவனத்தில் கொள்ளுங்கள்.

## குறுக்கெழுத்துப் போட்டி இல.219 5

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | | ■ | 2 | ■ | 3 |
| | ■ | 4 உ | கா | ண் | டா |
| 5 | | ழ | | ■ | |
| | ■ | வ | ■ | 6 | ■ |
| ■ | 7 | ன் | 8 | | ■ |
| 9 | | ■ | 10 | | |

### மேலிருந்து கீழ்

01. இலங்கையின் இரண்டாவது சர்வதேச விமான நிலையம் அமைக்கப்பட்டுக் கொண்டிருக்கும் இடம்.
02. 'ஒருவன்' என்றும் அர்த்தப்படும்.
03. மரங்களைத் தறிக்கப் பயன்படும் உபகரணம் ஒன்று.
04. விவசாயத்தை தொழிலாகக் கொண்டவன்.
06. குழு-ஒத்தகருத்துச் சொல்.
07. நெருப்பிலிருந்து சிதறும் துகள்.
08. நியதி-ஒத்தகருத்துச் சொல்.

### இடமிருந்து வலம்

01. (பொதுவாக) மனிதனின் உறைவிடம்.
04. 'கம்பாலா'வை தலைநகராகக்கொண்ட கிழக்காபிரிக்க நாடு.
05. ஞாயிற்றுத்தொகுதியில் பெரிய கோள்.
07. ஐம்பதாவது ஆண்டில் கொண்டாடப்படுவது.
09. ஆட்டில் பெண் இனத்தைக் குறிக்கும் சொல்.
10. பூட்டான் நாட்டின் தலைநகரம்.

### குறுக்கெழுத்துப்போட்டி 216 விடைகள்

**மேலிருந்து கீழ்**

| | |
|---|---|
| 01. விகுதி | 06. இடையன் |
| 02. மலையாளம் | 08. பனை |
| 03. சதம் | 09. பாரி |

**இடமிருந்து வலம்**

| | |
|---|---|
| 01. விமர்சனம் | 07. கூடை |
| 04. குலை | 08. பம்பாய் |
| 05. தியாகம் | 10. மீன் |

குறுக்கெழுத்துப் போட்டி -219
**"விஜய்"**
த.பெ.எண். 2037
கொழும்பு

### பாராட்டுப் பெறுவோர்

எம்.என்.எம்.ஹுஸைன், தரம் - 12, க/ஜாமியுல் அஸ்ஹர் ம.ம., உடத்தலவின்ன மடிகே.

ஆர்.சுவந்தன், தரம் - $10^{A}$, நஸ்ரியா ம.கல்., சிலாபம்.

ஜே.மோசஸ், தரம் - 9, பரி.தோமையர் கல்., குருதலாவை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# சேனைத் தலைவனின் மறைவு

கி.பி 1656 ஏப்ரல் மாதம் 8 ஆம் திகதி மன்னன் சேனாதிபதி ஹல்பட் அவர்களைச் சந்தித்தார். நகரத்தைச் சுற்றி வளைத்தமை குறித்துப் பேச்சுவார்த்தை நடத்தினார். மன்னனுக்குத் தெரியாமல் நகருக்கு ஒன்றும் செய்வதில்லை என ஹல்பட் வாக்குறுதி வழங்கினார்.

அதற்கு அடுத்த நாள் இச்சேனாதிபதி நகரைச் சுற்றி வளைக்க ஏற்பாடு செய்ததை மேற்பார்வை செய்யச் சென்றார். அங்கு அவர் துப்பாக்கிச் சூட்டினால் கொல்லப்பட்டார். அதனால், ஏற்பட்ட வெற்றிடத்திற்கு 'எட்ரியன் வேன் த மீடன்' என்பவர் நியமிக்கப்பட்டார்.

இதற்கிடையில், போர்த்துக்கேயரின் கேடுகாலம் மேலும் நெருங்கியது. இதன்போது, இந்தியாவின் போர்த்துக்கேய மன்னரின் பிரதிநிதியும் மரணமானார். அவ்விடத்திற்கு மஸ்கரஞ்ஞாஸ் ஹோமெம் என்பவர் நியமிக்கப்பட்டார். அவர் ஒருமுறை பதவியிறக்கம் செய்யப்பட்டவர். மிகவும் கடுமையானவர். மரணமடைந்த போர்த்துக்கேய மன்னனின் பிரதிநிதி கொழும்புக்கு அனுப்பத் தெரிவு செய்த மேலதிக படை அணியை அவர் தாமதிக்கச் செய்தார். அவர் கொழும்பிலுள்ள போர்த்துக்கேயருடன் பகைமை பாராட்டியதே அதற்குரிய காரணமாகும்.

எனினும், ஏனையோரின் வற்புறுத்தல் காரணமாக கடற் படையொன்றை அனுப்பினார். எனினும், அந்தக் கடற்படையின் தளபதி அவ்வளவு திறமைசாலி அல்ல.

அவர் மிகத் தூரத்திலிருந்தே ஒல்லாந்த கடற்படையை அவதானித்தார். அப்படைகளைக் கண்டு அச்சமடைந்து தமது கப்பல்களை வேறு திசைக்குத் திரும்பும்படி உத்தரவிட்டார். அந்தக் கப்பல்கள் இறுதியில் தூத்துக்குடியை வந்தடைந்தன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலக நாடுகளைப் பிரிக்கும் தடுப்புச்சுவர்கள்

**உலக நாடுகள் பல அரசியல் அல்லது மத வேறுபாடுகளின் காரணமாக வேறுபட்டிருப்பதை நாம் அறிவோம். இவ்வாறு வேறுபட்டுள்ள நாடுகள் ஏனைய நாடுகளிடமிருந்து தமது நாட்டைக் காத்துக் கொள்ளும் விதமாக எல்லைகளை வகுத்துள்ளன.**

ஆரம்ப காலங்களில் வேலித்தடைகளை அமைத்தே ஒவ்வொரு நாடும் தமது எல்லைக் கோடுகளை அடையாளம் காட்டின. நாளடைவில் விஞ்ஞான தொழில்நுட்பம் வளர்ச்சி கண்டதன் பயனாக வேலிகளுக்குப் பதிலாக தடுப்புச்சுவர்கள் எழுப்பப்படலாயின. தற்போதும் இவ்வாறான தடுப்புச்சுவர்களை பல நாடுகளில் காணமுடியும். அவ்வாறு மனிதனால் எழுப்பப்பட்டு இன்றும் பேசப்பட்டு வருகின்ற உலகிலுள்ள பிரசித்தி பெற்ற சில தடைச்சுவர்களை- எல்லைச்சுவர்களை பற்றிய சில விபரங்கள் இங்கு தரப்படுகின்றன.




## 'பேர்லின்' சுவர்

உலக நாடுகளுக்கிடையே காணப்படுகின்ற தடைச்சுவர்களில் 'பேர்லின்' சுவர் மிகவும் புகழ் பெற்றதாகும். 1961 ஆம் ஆண்டு தொடக்கம் 1985 ஆம் ஆண்டு வரை ஜேர்மன் ஜனநாயக குடியரசினால் மேற்படி சுவர் பேணப்பட்டு வந்தது.

1961 ஆம் ஆண்டு அமைக்கப்பட்ட இந்த தடைச்சுவரினால் ஒரே குடும்ப உறவுகள் கூட இருவேறு நாடுகளுக்குள் பிரிபட்டுப்போக வேண்டிய நிலைக்கு ஆளாகினர். மேற்படி, 'பேர்லின்' சுவரானது 47 கி.மீற்றர் நிளத்தையும் 12 அடி உயரத்தையும் கொண்டதாகும்.

## சீனப் பெருஞ்சுவர்

சீனாவில் காணப்படும் சீனப் பெருஞ்சுவர்தான் உலகிலேயே ஏற்படுத்தப்பட்ட பாரிய கட்டுமாணப் பணியாக கருதப்படுகின்றது. கி.மு 210-221 ஆம் வருடகாலப்பகுதிகளில் அந்நாளைய ஷீ ஹுவான்தி என்ற சீன சர்வாதிகாரியினால் இச்சுவர் கட்டப்பட்டதாகக் கருதப்படுகின்றது. இது ஆறாயிரம் கி.மீற்றர் தூரம் வரையான நீளத்தைக் கொண்டதாகும். இதன் உயரம் 7.6 மீற்றர்களாகும்.

## செயுட்டா தடுப்புச்சுவர்

சைப்பிரஸ் நாட்டில் நிக்கோஸியா என்ற நகரம் காணப்படுகின்றது.மிகவும் பழைமை வாய்ந்த இந்த நகரமானது கி.மு 7 ஆம் நூற்றாண்டு காலம் தொட்டு ஒரு தலைநகரமாக இயங்கி வந்துள்ளதற்குரிய வரலாற்றுச் சான்றுகள் காணப்படுகின்றன. 1980 ஆம் ஆண்டு இந்த நகரத்தைச் சுற்றிவர 'செயுட்டா' என்ற தடுப்புச்சுவர் எழுப்பப்பட்டது. இந்த தடுப்புச் சுவரானது 8.2 கி.மீற்றர் நீளமுடையது. அவ்வாறே, 'மிலில்லா' என்ற சுவரொன்றும் எழுப்பப்பட்டது. இது 10.95 கி.மீற்றர் நீளத்தைக் கொண்டதாகும்.

## இஸ்ரேல் காப்புச் சுவர்

இஸ்ரேல் நாட்டில் எழுப்பப்பட்ட பாதுகாப்பு மதில் சுவரானது 600 கி.மீற்றர் நீளமானதாகும். 2004 ஆம் ஆண்டில் இது கட்டப்பட்டது.

## மெக்ஸிக்கோ சுவர்

மெக்ஸிக்கோவில் 1132 கி.மீற்றர் நீளமுடைய சுவர் நாட்டின் எல்லைப் புறத்தில் எழுப்பப்பட்டுள்ளது. பிறநாட்டவர்கள் சட்டவிரோதமாக மெக்ஸிக்கோவிற்குள் ஊடுருவுவதைத்தடுக்கும் நோக்கிலேயே மேற்படி சுவர் எழுப்பப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.




இப்பத்திரிகை கொழும்பு - 2, இல. 08, ஹுனுப்பிட்டிய குறுக்கு வீதி, விஜய நியூஸ்பேப்பர்ஸ் நிறுவனத்தினால் 2009, மே மாதம் 13 ஆம் திகதி புதன்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Printed and Published by Wijeya Newspapers Ltd. No. 8, Hunupitiya Cross Road, Colombo - 02, on Wednesday May 13, 2009.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org